janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி


மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 85 | 2023 பிப்ரவரி 19 - பிப்ரவரி 25 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 46




நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணை தேவை! ப 15



பணிகளைத் தொடர்வோம்! ப 02



பா.ஜ.க. ஆட்சியின் அந்திம காலம் தொடங்கிவிட்டது ப 03



## அதானி முறைகேடு, ஒன்றிய மக்கள் விரோத பட்ஜெட்டை கண்டித்து

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்

ஒன்றிய அரசின் மக்கள் விரோத பட்ஜெட்டை கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் தமிழ்நாடு முழுவதும் பிப்.13 அன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய அரசு இந்த ஆண்டு (2023–2024 ) வாசித்த நிதிநிலை அறிக்கை சாதாரண மக்களுக்கு ஏமாற்றம் அளிக்கும் பட்ஜெட்டாக அமைந்துள்ளது.

வருமான வரி எல்லைக்குள் இருப்போர் வரிவிலக்கு பெரும் உச்சவரம்பு, ஆண்டு வருமானம் ரூ.5 லட்சமாக உயர்த்தப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அது நிறைவேற வில்லை.

நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும், சுய சார்புக்கு அடித்தளமாகவும் விளங்கிவரும் சிறு, குறு, நடுத்தரத் தொழில்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.9 ஆயிரம் கோடி என்பது மிக சொற்பமான தொகையாகும். இது தொழில் முனைவோருக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

விவசாயிகளின் விளைபொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்வது குறித்து சட்டப்பூர்வ ஏற்பாடுகள் செய்வதில் நிதிநிலை அறிக்கை கவனம் செலுத்தவில்லை.

கட்டுமானத் தொழிலாளர்கள் உள்ளிட்ட 93 சதவீத அமைப்பு சாரா தொழிலாளர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் நலன்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது.

ஆயுள் காப்பீட்டு நிறுவனம் மற்றும் பாரத ஸ்டேட் வங்கியின் முதலீட்டைப் பெற்றுள்ள அதானி குடும்ப நிறுவனத்தின் கணக்கியல் மோசடி குறித்து ஒரு வார்த்தை கூட பட்ஜெட்டில் கூறப்படாதது, இந்த அரசு குறிப்பிட்ட ஒரு சில கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மிகுந்த விசுவாசமாக நடந்து கொள்கிறது என்பதை உறுதிப்படுத்துகிறது.

தமிழ்நாடு அரசு வலியுறுத்தி வரும் ஜி.எஸ்.டி. இழப்பீடு உள்ளிட்ட மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய தொகையை ஒன்றிய அரசு வழங்க மறுத்து வருவது, அரசியல் காரணங்களை அடிப்படையாகக் கொண்ட பாரபட்ச நடவடிக்கையாகும் என்றும் குற்றம் சாட்டப்பட்டது.

மேலும், அதானி குழுமம் மீது ஹிண்டன்பர்க் நிறுவனம் கூறியுள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.



**ஈரோடு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட குழுக்கள் சார்பில் ஈரோடு, சூளை பேருந்து நிறுத்தம் அருகில் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.டி.பிரபாகரன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட நிர்வாகிகள் எஸ்.சின்னசாமி, எம்.குணசேகரன், என்.ரமணி, ஜி.வெங்கடாசலம், கே.சக்திவேல், பி.என்.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் இரா. முத்தரசன், மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி, முன்னாள் தேசியக்குழு உறுப்பினர் த.ஸ்டாலின் குணசேகரன், முன்னாள் கட்டுப்பாடுக்குழு உறுப்பினர் வி.பி.குணசேகரன் ஆகியோர் உரையாற்றினர். கட்சியின் ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் சு.மோகன்குமார், மாநிலக்குழு உறுப்பினர் டி.ஏ.மாதேஸ்வரன், மாவட்ட முன்னாள் செயலாளர் கே.ஆர். திருநாவுக்கரசு, விவசாயிகள் சங்க மாநிலத் துணைத் தலைவர் சி.எம்.துளசிமணி உள்ளிட்ட ஏராளமானோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். நிறைவாக, கட்சியின் ஈரோடு வட்டார செயலாளர் ஜி.கல்யாணசுந்தரம் நன்றி கூறினார்.

**திருவள்ளூர்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருவள்ளூர் மாவட்டத் துணைச் செயலாளர் வி.சரவணன் தலைமையில், திருவள்ளூர் ரயிலடியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணை செயலாளர் மு.வீரபாண்டியன், மாவட்ட செயலாளர் கே.கஜேந்திரன், மாவட்ட பொருளாளர் எஸ்.மயில்வாகனன், மாவட்ட நிர்வாக உறுப்பினர்கள் ஜே.அருள், சி.மாரி, சி. குருமூர்த்தி, என். எஸ். பிரதாப் சந்திரன் ஆகியோர் கண்டன உரை ஆற்றினர்





**தென்சென்னை:** தென் சென்னை மாவட்டம், திருவான்மியூரில் மாவட்டச் செயலாளர் எஸ்.கே.சிவா தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கட்சியின் மாநிலச் செயற்குழு உறுப்பினர் க.சந்தானம், தமிழ்நாடு ஏஐடியுசி தலைவர் எஸ்.எஸ்.காசி விஸ்வநாதன், மாநில கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் எம்.செல்வராசு ஆகியோர் கண்டன உரையாற்றினர். மாவட்டக் குழு உறுப்பினர்கள் டி.பி.ஜெயராமன், எம்.டி.குமார்,இரா.அழகேசன்,வி.வித்யா, சி.சு.கோவிந்தன், ஜி.கண்ணதாசன், டி.ஜோதி உள்ளிட்ட தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

**விருதுநகர்:** விருதுநகர் தேசபந்து

தொடர்ச்சி 6,7ம் பக்கம்

கட்சிக் கடிதம்

# பணிகளைத் தொடர்வோம்!



பேரன்புமிக்க தோழர்களே !

**இயக்கப் பணிகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அவைகள் தொய்வின்றியும் தொடர்ந்தும் நிறைவேறி வருவதும் மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்றது.**

**அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநில மாநாடு கடந்த பிப்ரவரி 5, 6, 7 ஆகிய தினங்களில் வடசென்னையில் நடைபெற்றது.**

**தொடக்க நாளான பிப்ரவரி 5ஆம் நாள் மாலை பேரணியும், பொதுக் கூட்டமும் நடைபெற்றது. பேரணி மாபெரும் எழுச்சியுடன் கூடிய பேரணியாக அமைந்தது. தமிழ்நாடு முழுவதுமிருந்து ஆயிரக்கணக்கான மாணவர்கள் பங்கேற்றனர்.**

உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப்பள்ளி, கலைக்கல்லூரி, சட்டக்கல்லூரி, மருத்துவக் கல்லூரிகளில் பயின்று வரும் மாணவச் செல்வங்கள் உற்சாகப் பெருகுடன் பங்கேற்றது, அவர்கள் எழுப்பிய முழக்கங்கள் நம்மை மெய்சிலிர்க்க வைத்தன.

அடுத்த இரண்டு நாட்களும் பிரதிநிதிகள் மாநாடு நடைபெற்று பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றி உள்ளனர். புதிய நிர்வாகிகளையும் தேர்வு செய்துள்ளனர்.

எதிர்கால தலைமுறை மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டுக்குரியது. மாநாட்டை வடசென்னை மாவட்டக் குழு மிகச் சிறப்பாக, வெற்றிகரமாக நடத்தியுள்ளது பாராட்டுக்குரியது.

மாணவர் அமைப்பை தமிழ்நாட்டில் பலம் பொருந்திய அமைப்பாக உருவாக்கிட அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

மாணவர்களை தங்கள் வயப்படுத்தி, பிஞ்சு உள்ளங்களில் பாசிச நஞ்சை புகுத்தி, ஏதுமறியா அப்பாவி மாணவர்கள், இளைஞர்களை மதவெறி பிடித்தவர்களாக உருவாக்கி, மக்களிடையே மோதலை உருவாக்கி, தங்களின் மிகக் குறுகிய அரசியல் நோக்கத்தைநிறைவேற்றிக்கொண்டுள்ள வஞ்சகக் கூட்டத்திடமிருந்து மாணவச் செல்வங்களை காத்திட நாம் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழகத்தில் உள்ள அனைத்து உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், தொழில்கல்வி நிலையங்கள் என அனைத்திலும், அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தை அமைத்திட, பலப்படுத்திட மாநாட்டில் சபதம் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அவர்களின் சபதம் என்பது சுயநலமற்றது; பொது நோக்கத்தைக் கொண்டது.

தொடக்க கல்வி முதல் உயர் கல்வி வரை இலவசமாக அரசு அளித்திட வேண்டும் என்பது மிக முக்கிய தீர்மானம்.

கல்வி சேவை என்ற பெயரால் முழுமையான தொழிலாக மாற்றி மாணவர்களைக் கொண்டு தங்களின் கல்லாப்பெட்டியை நிரப்பிப் கொண்டிருக்கும் தனியார் துறையிடமிருந்து மீட்டெடுத்து, மாணவர்கள் அவரவர் விரும்பும் கல்வியை கற்க வழிவகை காண உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தனியார் கல்வி நிலையங்கள் பல்கிபெருகும் இன்றைய நிலை தொடருமேயானால் கல்வி கற்பது எட்டாக்கனியாகிவிடும் அபாயம் ஏற்படும். அதன் விளைவுகள் ஏழை, எளிய மக்களின் வீட்டு பிள்ளைகளுக்கு கல்வி என்பது பகல் கனவாகிவிடும்.

இவை மட்டுமல்ல, கல்வி மாநில பட்டியலுக்கு மீண்டும் கொண்டுவரப்பட வேண்டும். ஒன்றிய பட்டியலில் கல்வி நீடிப்பது பேராபத்து.

இன்றைய ஒன்றிய அரசு தனது ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி, தனது எஜமான் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் மனுதர்ம கல்வி முறையை வலுக்கட்டாயமாக திணிக்க முயல்கின்றது. அதன் ஒரு பகுதி தான் தேசியக் கல்விக் கொள்கை 2020 என்பதாகும்.

**ஆகச் சிறந்த மாணவர்களை உருவாக்கக்கூடிய கல்விதான் தேசிய கல்விக் கொள்கை என்று தம்பட்டம் அடித்து, குலக்கல்வி முறையைப் புகுத்தி, தனது நான்கு வர்ண கொள்கையின்படி பெரும் பகுதியினருக்கு கல்வி கிட்டாமல் செய்யும் வஞ்சக வலையை புரிந்து கொள்ள வேண்டும்.**

நான்கு வர்ண சட்டம் உடைக்கப்பட்டு, கடைசி வர்ணத்தைச் சேர்ந்தவர்களும், பஞ்சமர்களும் படித்து பட்டமும் பெற்று பல்வேறு துறைகளில் கீழ்நிலை முதல் உயர்நிலை வரை பணியாற்றிக் கொண்டுள்ளனர்.

இதனை ஆபத்து என சங்கப் பரிவாரங்கள் கருதுகிறார்கள். இது நான்கு வர்ண சட்டம் மீறப்பட்டதாக கருதுகிறார்கள். ஆதலால் நான்கு வர்ண சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்திட எத்தனிக்கின்றனர்.

இவர்களின் வஞ்சகம் நிறைந்திட்ட சூழ்ச்சியை முறியடித்திட கல்வி மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும். அதற்கான உறுதியான போராட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். மாணவர்கள் மட்டுமல்ல, பெற்றோர்களும் பங்கேற்க வேண்டும். பெற்றோர்கள் மாணவர்களிடத்தில் ஒன்றிய அரசின் உள்நோக்கமுடைய கல்விக் கொள்கை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடல் வேண்டும்.

அவரவர் தாய் மொழியில் கல்வி என்பதனை உறுதிப்படுத்தி, உத்திரவாதப்படுத்திட வேண்டும்.

**மொழியை பயன்படுத்தும் மக்கள் தொகைக்கு ஏற்ப ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்வதில்லை. மாறாக மிகச் சொற்பமான மக்கள் பேசுகின்ற சமஸ்கிருதம் என்கிற மொழிக்கு ஒதுக்கப்படும் நிதி மிக அதிகம். தமிழ் உள்ளிட்ட மொழிகளின் வளர்ச்சிக்கு ஒதுக்கப்படும் நிதி என்பது மிக மிக குறைவு. இந்த பாரபட்சம் என்பது ஏதோ எதேச்சையாக நடைபெறுகின்ற செயல் அல்ல, திட்டமிட்டே மேற்கொள்ளப்படுகின்றது. சமஸ்கிருதம், இந்தி மட்டும் வளர்ந்தால் போதும் என்கிற குறுகிய மனநோக்குடன் இச்செயல்கள் நடைபெறுகின்றன.**

நம் தாய் மொழியான தமிழில் படிக்கவும், பட்டங்களைப் பெறவும் சஞ்சலமின்றி உறுதியான போராட்டங்கள் தேவை.

இன்றைய இளம் மாணவர்கள்தான் நாளைய தலைவர்கள். இன்றைய மாணவர்கள்தான் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்கள்.

அத்தகைய நம்பிக்கை நட்சத்திரங்களான மாணவச் செல்வங்களுக்கு ஆதரவளிப்பது, உற்சாகப்படுத்துவது நம் ஒவ்வொருவரின் கடமை, பொறுப்பாகும்.

அந்நிய ஆங்கிலேய ஆட்சியை விரட்ட நடைபெற்ற விடுதலைப் போர்க்களத்தில் மாணவர் பெருமன்ற மாணவர்களின் பங்களிப்பை அரசியல் அறிந்தோர் நன்கறிவர்.

"தங்களுக்கான கல்வி வேண்டும்", "கல்வி எங்களின் அடிப்படை உரிமை" என்கிற முழக்கத்தோடு "பரிபூரண சுதந்திர வேண்டும்" என்கிற முழக்கம் இணைந்து பேரிகையாக நாடு முழுவதும் எதிரொலித்தது.

கல்வி நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் தோறும் இம்முழக்கங்கள் எதிரொலிக்க செய்தது.

அரசியல் தலைவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அழைக்கப்பட்டு மாணவர்களிடம் சொற்பொழிவு ஆற்ற வழிவகை காணப்பட்டது. மாணவர்களிடத்தில் பேரெழுச்சி ஏற்பட்டு தங்களின் படிப்பைக் காட்டிலும் நாட்டின் விடுதலையே முதன்மையானது என்று முழக்கமிட்டனர்.

கல்வியில் மிகச்சிறந்த மாணவர்களாகவும், அதே நேரத்தில் விடுதலைக்கான போர்க்களத்தில் மாவீரனாகவும் திகழ்ந்தார்கள்.

அத்தகைய மாணவர்கள் பட்டியல் நீண்ட நெடியது. தமிழகத்தில் மட்டுமல்ல, நாடு முழுவதும் மட்டுமல்ல, நாட்டை கடந்தும் உள்ளது. உயர் கல்வி பயில இங்கே வசதி இல்லாத காரணத்தால், லண்டன் மாநகர் சென்று பயின்ற மாணவர்களும், சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திப்பது போன்று லண்டன் நகரில் புகழ்மிக்க கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பயின்று கொண்டே தாய் நாட்டின் விடுதலைக்கு குரல் எழுப்பியவர்களும் உண்டு. இத்தகைய பாரம்பரியத்தைக் கொண்டதுதான் அனைத்திந்திய மாணவர் பெருமன்றம்.

இந்தப் பாரம்பரியம் தழைத்தோங்குவது மாணவர்களுக்கு மட்டுமல்ல, பெற்றோர்களுக்கு மட்டுமல்ல நாட்டிற்கே நல்லது.

அத்தகைய நல்லவை நடந்திட, அல்லவை அகன்றிட கல்விநிலையங்கள் அனைத்திலும் மாணவர் பெருமன்றம் உருவாகட்டும். அமைப்பு இருக்கும் இடத்தில் மேலும் பலமாகட்டும். இத்தகைய அரும்பணிகளை மேற்கொள்ள ஆயத்தமாவோம். மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்



# பா.ஜ.க. ஆட்சியின் அந்திம காலம் தொடங்கிவிட்டது

## நாடாளுமன்றத்தில் கே.சுப்பராயன் பேச்சு

**குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நாடாளுமன்ற மக்களவையில் 08.02.2023 அன்று கே. சுப்பராயன் பேசியதாவது:**

வணக்கம்! குடியரசு தலைவர் உரையின் மீது, அதில் இடம்பெற்றிருக்க வேண்டிய பல்வேறு விஷயங்களை நான் திருத்தங்களாக முன்மொழிந்திருக்கிறேன். அந்தத் திருத்தங்களின் அடிப்படையில் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். இந்த அரசாங்கம், நம்பிக்கையோடு வாக்களித்த மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான முறையில் நடந்து கொள்ளவில்லை என்பதை இந்த அரசாங்கத்தின் 8 ஆண்டுகால அனுபவங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

அரசியலமைப்புச் சட்டத்தின் பெயரால் உறுதிமொழி எடுத்துக் கொண்டவர்கள், அந்த அரசியலமைப்புச் சட்டத்தின் உள்ளடக்கத்தையே சிதைத்து வருகிறார்கள். ஜனநாயக அரசியலமைப்பில் என்னவெல்லாம் செய்யக் கூடாதோ, அவை அனைத்தையும் இவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் உங்கள் மூலமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். அப்பட்டமான அத்துமீறல்கள் என்றால் அவை பா.ஜ.க அரசாங்கத்தில் தான் நடக்கும் என்பதை நடைமுறை அனுபவங்கள் வெளிப்படுத்தி வருகின்றன.

**சி.பி.ஐ, அமலாக்கத்துறை, வருமான வரித்துறை போன்ற அரசு நிறுவனங்களை எதிர்க்கட்சிகளைப் பழி தீர்ப்பதற்காகவும், சிதைப்பதற்காகவும் முறைகேடாகப் பயன்படுத்துகிறார்கள். தமிழ்நாட்டில் பல இடங்களில், வீடுகளில் சோதனை நடத்தினார்கள். அந்தச் சோதனைகள் மீது இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பது இதுவரையில் தெரியவில்லை.**

தேவையானால் சோதனை நடத்துவார்கள், தேவையில்லையென்றால் நிறுத்திக்கொள்வார்கள் என்பதெல்லாம் ஜனநாயக அரசியலமைப்பின் அடையாளங்கள் அல்ல என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். நடுநிலையோடு செயல்பட வேண்டிய தேர்தல் கமிஷன் பா.ஜ.க வின் ஒரு கிளையாகவே மாறி விட்டது; மாற்றப்பட்டுவிட்டது. இது மிகவும் அபாயகரமான விஷயம் என்பதையும் தங்கள் மூலம் நான் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதிகாரத்தைப் பயன்படுத்தி, தேர்தல் நிதி வசூலிப்பதற்காகத் தேர்தல் நிதி பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டு பெரும் நிதி திரட்டப்பட்டு இருக்கிறது. இந்தியாவிலேயே, பா.ஜ.க விற்குத்தான் மிக அதிகமான அளவில் தேர்தல் நிதி திரட்டப்பட்டு இருக்கிறது. பா.ஜ.க தன்னுடைய அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி தேர்தல் நிதி திரட்டுகிறது என்பது வெளிப்படையான விஷயம் ஆகும். இது முறையற்ற செயல் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கரையான் அரிப்பது போல், சமீபத்தில் நீதித்துறையிலும் ஊடுருவி இருக்கிறார்கள். சென்னை உயர்நீதி மன்றத்திற்கு நீதிபதி நியமனம் செய்யப்பட்டதில், ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்த ஒருவர் நீதிபதியாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்.



இவையெல்லாம் அத்துமீறல்களைத் தெளிவாகக் காட்டுகிறது. ஆளுநர்கள் மத்திய அரசின் உளவாளிகளா? ஆளுநர்களை எதற்காக நியமனம் செய்கிறார்கள்? ஆளுநர்கள் எதிர்க்கட்சிகளின் அரசாங்கத்தை நிலைகுலைக்கிறார்கள். தமிழ்நாடும், கேரளாவும் அதற்கு உதாரணங்கள் ஆகும். இந்த இரண்டு மாநிலங்களிலும், ஆளுநர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எல்லைதாண்டிய பயங்கரவாதம் அரசியலமைப்புச் சட்ட எல்லைகளைக் கடந்து அநீதியை இழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவையெல்லாம் எதை உணர்த்துகிறது? இந்த அரசாங்கம் கூட்டாட்சி முறையை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை உணர்த்துகிறது. மாநில அரசுகளின் அதிகாரங்களைப் பறித்து, மாநில அரசாங்கத்தை ஒரு நகரசபை போல் இருக்க வேண்டும் என்று இந்த அரசாங்கம் விரும்புகிறது.

**பி.பி.சி ஆவணப்படம் இவர்கள் நிகழ்த்தியவற்றை அவர்கள் ஆதாரப்பூர்வமாகத் திரையில் காட்டுகிறார்கள். அதற்கு ஏன் தடை விதிக்கிறார்கள்? தடை விதிப்பதற்கான நோக்கம் என்ன? ஜனநாயகத்தை மிரட்டிப் பணிய வைக்க முடியாது. நாட்டு மக்களை மிரட்டல் மூலம் ஆட்சி செய்து கொண்டிருக்க முடியாது.**

பா.ஜ.க ஆட்சியின் அந்திம காலம் தொடங்கிவிட்டது. வறுமையும், வேலையில்லா திண்டாட்டமும் வரலாறு காணாத அளவிற்குப் பெருகிவிட்டது. ஆனால், கார்ப்பரேட் நிறுவனங்களின் செல்வக் குவிப்பு கொழுத்துவிட்டது. குடிசையில் இருந்து கோட்டையில் இருக்கிறவர்கள் வரை அவமானப்பட்டு, அம்பலப்பட்டு இருப்பது அதானி என்ற பெயர் தான். இந்தப் பெயர் பா.ஜ.க ஆட்சியின் அஸ்திவாரத்தையே தகர்க்கும் என்பதைச் சொல்லி விடைபெறுகிறேன்.

### கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு 70% வரி விதிக்க வேண்டும்

**நாடாளுமன்ற மக்களவையில் ஒன்றிய அரசாங்கத்தின் நிதிநிலை அறிக்கை 2023–24 மீதான விவாதத்தின் போது தோழர் கே. சுப்பராயன் பேசியதாவது:**

நாட்டின் 92 சதவிகித வேலைவாய்ப்பை சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) வழங்கி வருவது மாண்புமிகு நிதியமைச்சருக்குத் தெரியாத விஷயம் அல்ல. அத்தகைய வேலைவாய்ப்பளிக்கிற விஷிவிணிக்கு ஜி.எஸ்.டி வரியில் இருந்து முற்றாக விலக்கு அளிக்க வேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன். எனது தொகுதியான திருப்பூரிலும், அதற்கு அருகில் உள்ள கோவையிலும் பம்ப்செட் மற்றும் பனியன் கம்பெனிகள் அதிகமாக உள்ளன; இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பளித்து வருகின்றன. எனவே, இந்தத் தொழில் நிறுவனங்களுக்கு ஜி.எஸ்.டி வரியில் இருந்து முற்றாக விலக்கு அளிக்க வேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன்.

ஓராண்டிற்கு முன், அரசாங்கம் கார்ப்பரேட் வரியை 10 சதவிகிதம் குறைத்தது. இது யாருக்கான அரசாங்கம்? கார்ப்பரேட்டுக்களுக்கான அரசாங்கம் இது என்பதைத்தான் இந்த வரிக்குறைப்பு காட்டுகிறது. கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு 70 சதவிகிதம் வரி (Super Tax) விதிக்க வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். இந்தக் கருத்தை நோபல் பரிசு பெற்ற பொருளாதார மேதை முன்வைக்கிறார். கார்ப்பரேட் நிறுவனங்கள் மீது 70 சதவிகித வரி விதித்தால், இந்தச் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மீது வரி விதிக்க வேண்டியதில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகிறேன்.

**இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் MPLAD நிதி 5 கோடி ரூபாயின் மீது 18 சதவிகிதம் ஜி.எஸ்.டி வரி விதிக்கப்படுகிறது. எனவே, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 4 கோடியே 10 இலட்சம் ரூபாய் மட்டுமே வந்து சேரும். அதுவும் இரண்டு ஆண்டுகளுக்கு நிறுத்தப்பட்டது. அந்த நிதியும் வழங்கப்படவில்லை. மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்குச் செலவழிக்கும் நிதிக்கு 18 சதவிகிதம் ஜி.எஸ்.டி வரி விதிப்பதா? ஏன் இதை ரத்துச் செய்யக் கூடாது? இந்த வரி விதிப்பை ரத்துச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.**

வறுமைக்கு ஆட்பட்டவர்கள் மேலும் வறுமைக்கு ஆட்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான் இந்த ஆட்சியில் நாம் கண்ட ஒரேயொரு பலன் ஆகும். கார்ப்பரேட் நிறுவனங்கள் கொழுத்துக் கொண்டே இருக்கின்றன. ஏழைகள் மேலும் ஏழைகளாகிறார்கள். இந்த இடைவெளியை நீக்க எந்தவொரு நடவடிக்கையும் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

ஏழைகளுக்காகத்தான் இருக்கிறோம் என்று சொல்லுகிற இந்த அரசாங்கம், ஏழைகளுக்கு வேலைவாய்ப்பளித்து வரும் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை 33 சதவிகிதம் குறைத்துள்ளது. ஏழைகளுக்காகத்தான் இருக்கிறோம் என்று சொல்லும் இவர்கள், உள்ளபடியே, மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தில் வேலைநாட்களை 200 ஆக உயர்த்தி, அந்தத் தொழிலாளர்களின் ஊதியத்தை 400 ரூபாயாக உயர்த்தி இருக்க வேண்டும்.

நிறைவாக ஒன்றைச் சொல்லி முடிக்க விரும்புகிறேன். 10000 அம்பானிகள், 20000 அதானிகள் இருந்தால் மட்டுமே இந்தியா வளரும்! இப்படிச் சொன்னது யார்? பிரதமருடைய நிதி ஆலோசகர் தான் இப்படிக் கூறியிருக்கிறார். இத்தகைய சிந்தனை கொண்டவர்கள்தான் இந்தியாவை இயக்குகிறார்கள் என்றால், ஒருவேளை ஆண்டவன் உண்மையில் இருந்தால், இந்தியாவை அவனால் கூட காப்பாற்ற முடியாது.

### ஜனசக்திக்கு கட்டுரைகள், செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு...

கட்டுரைகள் மிகச் சுருக்கமாக 800 வார்த்தைகளுக்கு மிகாமல் ஏ 4 சைஸ் பேப்பரில் ஒன்றரை பக்கத்திற்குள் இருக்க வேண்டும்.

பெரும்பாலும் தற்போதைய அரசியல், பொருளாதார, சமூக நிகழ்வுகளாக இருக்க வேண்டும்.

மறைந்த தலைவர்கள் பற்றிய விபரங்கள் மற்றும் வரலாற்றுக் கட்டுரைகள் ஜனசக்தி பத்திரிகையில் அரை பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

செய்திகள் அனுப்புவோர் பெயருக்கு முன்னால் இருக்கும் முன்னெழுத்தை (இனிசியலை) தமிழிலேயே எழுத வேண்டும்.

கட்டுரைகள் மற்றும் செய்திகள் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமைக்குள் ஜனசக்திக்கு கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

janasakthieditor@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு மட்டுமே கட்டுரைகள், செய்திகள் அனுப்ப வேண்டும். வாட்ஸ் அப்பில் அனுப்பக் கூடாது.

– ஆசிரியர் குழு

## ஜனசக்தி சமூக ஊடகங்கள்

**Janasakthi Tholaikatchi யூடியூப்பில்..**

- அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழக (AIPSO) மாநில மாநாட்டில் தலைவர்கள் ஆற்றிய உரைகள்..
- அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் 16 வது தமிழ்நாடு மாநில மாநாட்டுக் காட்சிகள்.. உரைகள்..
- ஒன்றிய பட்ஜெட்டும் உழைக்கும் வர்க்கமும் என்ற தலைப்பில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சி.எச்.வெங்கடாசலம் உரை
- 'ஹின்டன்பர்க் அறிக்கையும் பங்கு வர்த்தகமும்' தலைப்பில் பாஸ்கர் ஆனந்தராவ் உரை

**Janasakthi Tholaikatchi முகநூலில்..**

- மேற்கண்ட நிகழ்ச்சிகளின் நேரலை ஒளிபரப்பையும் புதிய நிகழ்ச்சிகள் மற்றும் செய்திகளையும் பாருங்கள்
- ஜனசக்தி டுவிட்டர், இன்ஸ்டாகிராம், டெலகிராம் செயலிகளிலும் இணைந்து கொள்ளுங்கள்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 46

## பினாமிகளை துடைத்தெறிக!

கோவை கிழக்கு சட்டப்பேரவை தொகுதிக்கான இடைத்தேர்தல் பணி மும்முரமாக நடந்து கொண்டிருக்கிறது.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருமகன் ஈவேரா அவர்களின் அகால மரணத்தால் ஏற்பட்ட இடைத்தேர்தல் என்பதால், அந்தத் தொகுதியில் மீண்டும் காங்கிரஸ் வேட்பாளரை நிறுத்துவது என திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி முடிவு செய்துவிட்டது.

எதிர்த்தரப்பில் யார் நிற்கப் போகிறார் என்பது மர்மக்கதை போல நீண்டு சென்றது.

தமிழ்நாட்டில் பிஜேபி பெரும் வளர்ச்சி கண்டு விட்டதாகவும், அதன் மாநிலத் தலைவர், முன்னாள் ஐபிஎஸ் அதிகாரி, தேர்தலில் தனித்து நின்றால் ஏராளமாக வாக்குகள் பெற்று வெற்றி பெற்று விடுவார் என்றும், அவரது நலம் விரும்பிகள் கொண்டாட்டம் போட்டு குறி சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

போட்டியிடப் போகிறாரா என்ற கேள்வியை வைத்துக் கொண்டு ஊடகங்கள் அவரைச் சுற்றி சுற்றி வந்தன. எத்தனை முறை மானம் கெட அவர் பேசினாலும், அவ்வப்போது ஊடக நண்பர்கள் கண்டனங்களை பதிவு செய்தாலும், அவரை அண்டி நின்று பேட்டி எடுக்க வேண்டிய கட்டாயம் ஏன் ஏற்படுகிறது என்பது, அந்த ஊடகங்களின் முதலாளிகளுக்கும், பணியாளர்களுக்கும்தான் வெளிச்சம்.

“எல்லா கட்சிக்கும் தன்னை வளர்த்துக் கொள்வதற்கு ஒரு உத்தி இருக்கும். உங்களுடைய வலிமையில் இருந்து தான் உங்களை வளர்த்துக் கொள்ள வேண்டுமே தவிர அடுத்தவர்களின் பலவீனத் திலிருந்து அல்ல. நாங்கள் யாருடைய பலவீனத்தையும் பயன்படுத்திக் கொள்ள மாட்டோம்” என்றெல்லாம் போதி மரத்தடிப் புத்தனைப் போலவே அந்த தலைவர் பேட்டி அளித்ததும் ஊடகங்களில் வந்தது.

தமிழ்நாட்டின் பெரிய கட்சிகளில் அஇஅதிமுகவும் ஒன்று. துவக்கத்தில் காங்கிரஸ், பின்னர் திமுக தலைமையிலான ஆட்சிகளைத் தவிர, மிச்சம் இருந்த அத்தனை தமிழ்நாடு மாநில அரசாங்கங்களையும் அதுதான் ஆளுங்கட்சியாக இருந்து நடத்தியது. இப்போதுள்ள மோடியின் ஒன்றிய அரசை எதிர்த்து ‘மோடியா? லேடியா?’ என களத்தில் நின்று அனுபவம் கண்டிருக்கிறது.

ஜெயலலிதா அம்மையார் தனக்குப் பின்னும் நூறாண்டுகளுக்கு அந்தக் கட்சி இருக்கும் என்று சட்டப்பேரவையில் பேசினார். ஆனால் தமது மடிகளை நிரப்பி கொள்வதற்காகவே அம்மையாரின் மறைவுக்குப் பின் ஆட்சியை நடத்தினர் அந்தக் கட்சியின் தலைவர்கள். மடியில் கனம் நிறைந்து விட்டதால், பிஜேபியின் வழக்கமான பிளாக் மெயில் அரசியலுக்கு பயந்து போய் கிடக்கிறார்கள்.

ஆட்சி போன பின்பு இரு தரப்பாக அதிமுக செயல்படுகிறது. இரட்டை இலை சின்னம் இருந்தாலே வெற்றி என அவர்கள் கருதுகிறார்கள். எனவே அதை ஒருவருக்கொருவர் கிடைக்க விடாமல் செய்வதற்கு திரை மறைவு வேலைகளிலும் ஈடுபடுகிறார்கள்.

பூனைகளுக்கு அப்பத்தை பகிர்ந்து கொடுக்க குரங்கு வந்த கதையாய்ப் பிஜேபி அவர்களை பாடாய்ப் படுத்துகிறது. முதலமைச்சராக பதவி வகித்து அனுபவம் பெற்றவர்களையே, தன் தேவைக்கேற்ப பிரித்தும், பின்னர் சேர்த்து வைத்தும் அது விளையாடிக் கொண்டிருக்கிறது.

எப்படியோ ஓ.பன்னீர்செல்வத்தின் வேட்பாளரை வாபஸ் பெற வைத்து, எடப்பாடி பழனிச்சாமி கையில் இரட்டை இலை சின்னம் தரப்பட்டு இருக்கிறது.

சின்னத்துக்கு வாக்கு கேட்பேன் ஆனால் வேட்பாளருக்கு கேட்க மாட்டேன் என்று ஓபிஎஸ் சொன்னார். இங்கு வரவே வர வேண்டாம் என இபிஎஸ் சொல்கிறார்.

அதிமுக தனது அடையாளத்தை பறிகொடுத்து, பிஜேபியின் பினாமி கட்சியாக மாற்றப்பட்டு விட்டது.

இந்திய அளவில் தொழில் வளர்ச்சி, கல்வி, மருத்துவம், விவசாயம், பொது விநியோக முறை, உற்பத்தி, சேவை என பல்வேறு துறைகளில், தமிழ்நாடு முதல் மூன்று இடங்களுக்குள் வந்து விடுகிறது. வாய் கிழியப் பேசும் பிஜேபி ஆளும் மாநிலங்களில் பல கடைக்கோடியில் கிடக்கின்றன.

தமிழகத்துக்கு உரிய வரி இழப்பீடு தர மறுப்பது, ஒன்றிய அரசின் வளர்ச்சி திட்டங்களை தமிழ்நாட்டுக்கு செயல்படுத்த மறுப்பது, தமிழ்நாட்டுக்குள் ஒன்றிய அரசு பணிகளில் வேற்று மாநிலத்தவர்களை மட்டுமே நியமிப்பது, தமிழ் வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கீட்டை ஆகப்பெரும் அளவு குறைப்பது, இந்தி மொழியை வலுக்கட்டாயமாகத் திணிப்பது, ஆளுநர் மூலம் ஒரு போட்டி அரசை நடத்த முயல்வது என ஒன்றிய அரசு தமிழ்நாட்டை பல்வேறு வகைகளில் வஞ்சித்து வருகிறது.

கோவை கிழக்கு இடைத்தேர்தல் 2024 நாடாளுமன்ற தேர்தலுக்கான ஒரு முன்னோடியும் ஆகும்.

கோவை கிழக்கு தொகுதி வாக்காளர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளரை ஏராளமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

களத்தில் நிற்கும் அஇஅதிமுக வேட்பாளர் படுதோல்வி அடைவது, அதன் தோல்வி மட்டுமல்ல, பிஜேபியின் தோல்வியுமாகும்.

# அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழக மாநில மாநாடு




அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகத்தின் மாநில மாநாடு பிப். 12 அன்று சென்னை சூளைமேட்டில் நடைபெற்றது.

இம்மாநாட்டிற்கு, பொருளாதார நிபுணர் பேராசிரியர் வி.பி. ஆத்ரேயா, ஐப்சோவின் முதுபெரும் தலைவர் க.முத்தியாலு ஆகியோர் தலைமை தாங்கினர். ஐப்சோ தமிழ்நாடு மாநில துணைச் செயலாளர், பா. செந்தில்குமார் வரவேற்புரை நிகழ்த்தினார்.

ஐப்சோ அகில இந்தியப் பொதுச் செயலாளர் ஆர். அருண்குமார் மாநாட்டை துவக்கிவைத்தார். ஐப்சோவின் அகில இந்திய துணைச் செயலாளர் ஹர்சந்த் சிங் சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் துணைத்தலைவர் ஆ. கோபண்ணா, தி.மு.க மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் நா.எழிலன் எம்.எல்.ஏ, காங்கிரஸ் கட்யின் துணைத் தலைவர் பொன். கிருஷ்ணமூர்த்தி, ஆம் ஆத்மி கட்சியின் மாநில பொதுச் செயலாளர் இ.ஜோசப் ராஜா, ம.தி.மு.க தேர்தல் பிரிவுச் செயலாளர் அந்திரிதாஸ், மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பழ.ஆசைத்தம்பி, த.மு.மு.க மாநில செயலாளர் முஸ்தபா, ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் எஸ்.பாஸ்கரன், பார்வர்டு பிளாக் தலைவர் வி.எஸ்.நவமணி உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

ஐப்சோ, தமிழ்நாடு மாநில பொதுச் செயலாளர் ஐ.ஆறுமுகநயினார் வேலை அறிக்கையை முன்வைத்தார்.

ஐப்சோ, தமிழ்நாடு மாநில பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் கொள்கை அறிக்கையை முன்வைத்தார். டாக்டர் ஏ.ஆர்.சாந்தி, கே.சி.கோபிக்குமார்,ஜி.முரளி,ஜி.செந்தில் குமார் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாநாட்டை நிறைவு செய்து உரையாற்றினார்.

ஐப்சோ மாநிலப் பொருளாளர் ஆர்.ராஜேந்திரன் நன்றி நவின்றார். மாநிலம் முழுவதிலுமிருந்து 150 க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ரஷ்ய உக்ரைன் பிரச்சனைக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வு காண வேண்டும், போரை நிறுத்த வேண்டும், இந்தியாவின் மதச்சார்பின்மை,ஜனநாயகம், அரசியல் சட்டத்திற்கு எதிராக ஒன்றிய அரசு செயல்படுவது கண்டனத்திற்குரியது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

ஆ.கோபண்ணா, உ.பலராமன், கே.சுப்பராயன் எம்.பி,சு. வெங்கடேசன் எம்.பி, ரவிக்குமார் எம்.பி , விருதுநகர் பாலச்சந்திரன் ஆகியோர் கௌரவத்தலைவர்களாகவும், முத்தியாலு, பேராசிரியர் ஆத்ரேயா,ஜி.முரளி ,டாக்டர் ஏ.ஆர். சாந்தி,கோபிக்குமார் உள்ளிட்டோர் தலைவர்களாகவும், டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், ஐ.ஆறுமுக நைனார், டாக்டர் நா.எழிலன் எம்.எல்.ஏ, பொன்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பொதுச் செயலாளர்களாகவும், ராஜேந்திரன் பொருளாளராகவும்,கந்தசாமி இணைப் பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

நிர்வாகிகள் உட்பட 31 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும், 91 பேர் கொண்ட பொதுக்குழுவும் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டது.

# அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழக மாவட்ட மாநாடுகள்






**திருவாரூர்:** அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகத்தின் திருவாரூர் மாவட்ட முதல் மாநாடு திருவாரூர் வர்த்தக சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. அ.இ.ச.ஒ கழக மாவட்ட பொறுப்பாளர்கள் கே.என். முருகானந்தம் மற்றும் வீ.தர்மதாஸ் தலைமை தாங்கினர். மாநாட்டை வாழ்த்தி திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் கே.மாரிமுத்து, கீழ்வேலூர் சட்டமன்ற உறுப்பினர் நாகை மாலி, காங்கிரஸ் மாவட்ட தலைவர் அன்பு வீரமணி, மதிமுக மாநில பிரச்சார தலைமை கழக செயலாளர் ஆரூர் சீனிவாசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் வை.செல்வராஜ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் ஜி.சுந்தரமூர்த்தி ஆகியோர் பேசினர். ச.ஒ கழகத்தில் மாநில பொதுச்செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.ரவிச்சந்திரநாத் சிறப்புரையாற்றினார்.

மாவட்ட செயலாளராக வீ.தர்மதாஸ், கே.என். முருகானந்தம் தேர்வு செய்யப்பட்டார்கள். தலைவராக சி.பாஸ்கர், பொருளாளராக எம்.சின்னக்கண்ணு தேர்வு செய்யப்பட்டனர். 31 பேர் கொண்ட மாவட்டக்குழு தேர்வு செய்யப்பட்டனர்.

**செங்கல்பட்டு:** அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழக மாவட்ட மாநாடு செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் ம.முருகன், ஒ.செல்வமணி ஆகியோர் தலைமையில் நாட்டைபெற்றது. சமாதான ஒருமைப்பாட்டு கழகத்தின் முன்னாள் மாநில செயலாளர் முத்தியாலு துவக்க உரையாற்றினார். தேசிய குழு உறுப்பினர் எம்.செந்தில்நாதன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ. ராஜ்குமார், சிபிஎம் மாவட்ட செயலாளர் க.பாரதி அண்ணா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாவட்ட தலைவராக ஒ.செல்வமணி தனஞ் செழியன், மாவட்ட துணை தலைவர்களாக டி.மேகவண்ணன், ரித்விக், மாவட்ட பொது செயலாளர்களாக ம.முருகன், க.ஹரி, மாவட்ட செயலாளர்களாக இ.ஸ்ரீகாந்த் டி.நடராஜன் மாவட்ட பொருளாளராக ஏ.ராஜா, இணை பொருளாளராக கே.வேதகிரி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். கேவி.சேகுவேராதாஸ் நன்றி கூறினார்.

**இராமநாதபுரம்:** அகில இந்திய சமாதான ஒருமைப்பாடு ஒருமைப்பாடு கழகத்தின் இராமநாதபுரம் மாவட்ட முதல் மாநாடு தியாகிகள் இல்லம் மங்களசாமி அரங்கத்தில் நடைபெற்றது. மருத்துவர் ஆரோக்கியராஜ், தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் சி.ஆர். செந்தில்வேல் வரவேற்புரை நிகழ்த்தினர். இராமநாதபுரம் நகர்மன்றத் தலைவர் ஆர்.கே.கார்மேகம் மாநாட்டினை துவக்கி வைத்தார். மாநில தலைமைக் குழு உறுப்பினர் கே.முத்தியாலு சிறப்புரை நிகழ்த்தினர்.

மாநாட்டை வாழ்த்தி சிபிஐ மாவட்டச் செயலாளர் நீ.சு.பெருமாள், சிபிஎம் மாவட்ட செயலாளர் வி.காசிநாததுரை, குறும்பட இயக்குநர் என்.கலையரசன், தமிழக வாழ்வுரிமை கட்சி மாநில இளைஞர் அணி தலைவர் ஜெ.ஜெரோன்குமார், கவிஞர் உரப்புளி ந.ஜெயராமன், ஆகியோர் பேசினர்.

பிஎஸ்என்எல் தொழிற்சங்க தலைவர் வி. மாரி (ஜனசக்தி) ஜெயகுமார் உள்ளிட்ட ஒன்பது பெண்கள் உள்ளிட்ட 60 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் புதிய நிர்வாகக்குழு தேர்வு செய்யப்பட்டது.

மருத்துவர் ஆரோக்கியராஜ் ஆர்.உமாமகேஸ்வரி ஆகியோர் தலைவர்களாகவும், சி.ஆர்.செந்தில்வேல், எஸ்.கே.ஜி.விக்ரமன் ஆகியோர் செயலாளர் களாகவும் துணைத் தலைவர்களாக ஆர்.ராஜேந்திரன், (எழுத்தாளர்) ஊரப்புளி ந. ஜெயராமன், துணைச் செயலாளர்களாக ஜெ.ஜெரான்குமார், கே.களஞ் சியம், பொருளாளராக ஆர்.தர்மராஜ், தலைமைக் குழு உறுப்பினர்களாக ஆர்.கருணாநிதி, பி.சண்முகராஜ், பி.ஜோதிபாசு, பாலாமணி, வி.சண்முககனி, பூமிநாதன், ராமசாமி, சுப்பிரமணியன், ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.



ஆர்.கிருஷ்ணமூர்த்தி

# மனிதக் கழிவை மனிதர் அள்ளும்...

**மனிதக் கழிவை மனிதர் அள்ளும் வழக்கம் இனி உண்டோ? உண்டு... ஏன்? அரசு உத்திரவுகளும், நீதிமன்ற தீர்ப்புகளும் மதிக்கப்படாதவரை, சாதீய கட்டமைப்புகள் ஒழிக்கப் படாதவரை, மனிதக் கழிவை மனிதர் அகற்றும் அவலம் தொடரத்தான் செய்யும்.**

விடுதலை பெற்று 75 ஆண்டுகள் ஆகி அதனைக்கொண்டாடும் நேரத்தில் மனிதக் கழிவை மனிதர் அள்ளும் அவலம் குறைந்தபோதும் தொடர்கிறது.

நீதிமன்றங்களும்மனிதக்கழிவைமனிதர் அள்ளும் முறை தடைசெய்யப்பட வேண்டும் என தீர்ப்புகளை மட்டுமே தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கப் போகிறதா? அரசும் இந்த அவலம் தொடரக்கூடாது என்பதற்கான உத்திரவுகளை மட்டுமே போட்டு விட்டு கண்களை மூடிக் கொண்டிருக்கப் போகிறதா? என்பது தான் மில்லியன் டாலர் கேள்விகள்.

**இன்று நேற்றல்ல:**

ஒட்டுமொத்த மனித சமுதாயமே மனிதக் கழிவை மனிதர் அள்ளும் முறை சமூக அவலம் எனவும், ஒழிக்கப்பட வேண்டிய ஒன்று எனவும் மாற்றுக் கருத்தின்றி சொன்ன பிறகு எங்கே தடை? எங்கே முட்டுக்கட்டை? தனிமனித விழிப்புணர்வு இல்லாமையும், சாதியக் கட்டமைப்பை சமுதாயம் கைவிடாதிருக்கிற நிலைமையும் தான் காரணம்.

**சமூக அவலம்**


மனிதக் கழிவை மனிதர் அள்ளும் சமூக அவலம் ஒரு குறிப்பிட்ட சாதியினரின் வேலையாக மாற்றப்பட்டதும், தொழில் முறையாக முத்திரை குத்தப்பட்டதும் தான் இதற்கான அடிப்படை. மனிதக் கழிவை கைகளால் அகற்றி தலையில் சுமந்து சென்று அப்புறப்படுத்த ஒரு குறிப்பிட்ட பிரிவினரைப் பணித்து, பின் அதையே அப்பிரிவுமக்களின் சாதியத் தொழிலாக சமூகம் பெயரிட்டது.

நாடாளுமன்றத்தில் 2019 ஆண்டு தரப்பட்ட தகவல் படி சுமார் ஒரு லட்சம் பேர் வரை இத்தொழிலில். இதில் பாதி பேர் அதாவது 50சதம் உத்திரப்பிரதேசத்தில்.

பிறகு சமூக விழிப்புணர்வு, நீதிமன்ற தீர்ப்பு, அரசு உத்திரவுகள் இவை காரணமாக இந்த எண்ணிக்கை சற்று குறைந்தாலும், வேறு வடிவத்தில் இக்கொடுமை அதிகரித்து, உயிர்ப்பலி வரை கொண்டு நிறுத்தியிருக்கிறது.

1949 ல் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் வாழ்வியல் நிலை பற்றி அறிய பி.என். பார்வே தலைமையில் ஒரு குழுவை அன்றைய பாம்பே அரசு அமைத்தது.

அக்குழு தனது அறிக்கையில் ஒரு குறிப்பிட்ட சாதியினரை இத்தொழிலில் பணியமர்த்துவது தடுக்கப் பட வேண்டும், நகர்ப்புறங்களில் நவீன கழிவறைகள் கட்டாயமாக்கப்பட வேண்டும், இப்பணியை நகராட்சி அமைப்புக்கள் மேற்கொள்ள வேண்டும் , நவீன பொதுக் கழிப்பறைகள் எண்ணிக்கையில் பரவலாக்கப்பட வேண்டும், நவீன தொழில் நுட்ப முறைகள் இத்தொழிலில் புகுத்தப்பட வேண்டும் என்பது போன்ற பரிந்துரைகளைக் குறிப்பிட்டது. இந்த பரிந்துரைகளை மத்திய அரசு அனைத்து மாநிலங்களுக்கும் அனுப்பிநடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தியது.



பின்னர் 1955ல் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் இந்த அவலம் ஒழிக்க, காந்தியடிகள் சுட்டிக் காட்டிய படி, மனிதாபிமானமற்ற நடைமுறையை அகற்ற அரசுகள் அதிக நிதியை ஒதுக்க வேண்டும்.நவீன கழிப்பறைகள் உட்பட பலவித கட்டுமானங்கள் நவீனமயமாக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது.

அத்துடன் அரசு அலுவலகங்கள், கல்விக் கூடங்கள், பொது கட்டிடங்கள் , மருத்துவமனைகள் இங்கெல்லாம் நவீன மய கழிவறைகள் கட்டாயமாக்கப்பட வேண்டும், மனிதக் கழிவை மனிதர் அள்ளும் முறை தடை செய்யப்பட்ட வேண்டும் எனவும் பரிந்துரைத்தது.

பார்வே கமிட்டி, பேராசிரியர் மால்காணி குழு என பல குழுக்களின் பரிந்துரைகளுக்குப் பின்னரும் பெரிய அளவில் மாற்றம் ஏற்படவில்லை.

1967 பாண்டியா குழு பரிந்துரைப்படி இத்தொழிலை இயந்திரமயமாக்கல், தொழில் செய்வோருக்கு சமூக பாதுகாப்பு, வாழ்வியல் தேவைகளை உறுதிப் படுத்துதல் ,தடைசெய்ய சட்டம் போன்றவை கொஞ்சம் பரிசீலனைக்கு உள்ளானது. அதனை ஒட்டி நடைமுறைக்கும் வர ஆரம்பித்தது.

இதன் தொடர்ச்சியாக அரியானா, கர்நாடகா, ராஜஸ்தான் போன்ற மாநில அரசுகள் பல நடவடிக்கைகளை மேற்கொண்டன. ஆனால் பெரிய அளவில் மாற்றமோ, முன்னேற்றமோ தென்படவில்லை.

1983ல் பாராளுமன்றத்தில் இப்பிரச்சினை எழுந்தது. அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களும் இந்த அருவருப்பான முறை ஒழிக்கப்பட வேண்டும், இத்தொழில் செய்வோர் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும் என்று உறுதி கூறினார். 1989 ல் மீண்டும் திட்டக்குழு ஆலோசகர் என்.கே. பாசு தலைமையில் ஒரு குழு அமைத்து, குழுவின் ஆய்படு பொருளாக பழயவை அனைத்தும் முன் வைக்கப்பட்டன.

இக்குழு அறிக்கை கடுமையானதாக இருந்தது. மத்திய அரசும் சீரிய நடவடிக்கைகளை எடுத்தது. ஆனால் மாநில அரசுகளின் சுணக்கம், சாதிய அடக்குமுறை நீட்டிப்பு, போதிய அளவு நிதி ஒதுக்கீடு இல்லாமை இவைகள் காரணமாக மனிதக் கழிவை மனிதர் அள்ளும் அவலம் தொடர்ந்தது.

1993ல் பாராளுமன்ற சட்டத்தின் வாயிலாக இந்த அவலமுறையைத் தடை செய்யவும், இத்தொழிலில் உள்ளவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் ஒரு ஆணையம் அமைக்கப்பட்டது. இதற்குப் பிறகும் முன்னேற்றம் இல்லை என்பதோடு இது சம்பந்தமான அனைத்து தீர்ப்புகள், சட்டங்கள், வழிகாட்டி முறைகள் என அனைத்தும் மீறப்பட்டன என்பதே உண்மை.

வன்கொடுமை போன்ற இந்த அவலம் நீக்க ஒரு சட்டம் 1993ல் இயற்றப்பட்டு 1997 ஜனவரி 26 அன்று நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

அதுவும் நாடு முழுவதும் அல்ல, 6 மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் மட்டும்.

பாதாள சாக்கடைக்குள் இறங்கி சுத்தம் செய்தல், மலக்கழிவு தொட்டி களுக்குள் இறங்கி சுத்தம் செய்தல் ஆகியவை இந்த மக்கள் மூலம் செய்யப்படுவது மிக அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. உயிர்ப்பலி ஆண்டுதோறும் அதிகரித்திருக்கிறது. 2019–20ல் 112 பேர், 2020–21ல் 140 பேர், 2022 ல் 200 க்கும் அதிகமாக உயிரிழப்பு.

மனிதக் கழிவை மனிதர் அள்ள ஒருவரை பணித்தால் ரூ.2000 அபராதம், அத்துடன் ஓராண்டு சிறை என 1993ம் வருட சட்டம் சொல்கிறது. ஆனால் இன்று வரை இச்சட்டத்தின் கீழ் எவர் மீதும் ஒரு வழக்கு கூட பதிவு செய்யப்பட்டவில்லை. எனவே இந்த அவலம் தொடர்கிறது.

மனிதக் கழிவுகளை வண்டிகள் மூலம், குவளைகள் மூலம் சுமந்து செல்வது, வடிகால் மற்றும் மலத் தொட்டிகளிலிருந்து மலம் மனிதர்களால் அகற்றப் படுவது பற்றி சட்டம் தெளிவாக எதுவும் சொல்லவில்லை. எனவே மனிதக் கழிவை மனிதர் அள்ளும் முறை சரளமாக நீடித்தது. இக்காலத்தில் டில்லி அரசு கைகளால் மலம் அள்ளுவது பற்றி மட்டும் தான் சட்டம் சொல்கிறது என்று உயர்நீதிமன்றத்தில் வாதிட்டது.

இதன் பிறகே 2003ல் துப்புரவு தொழிலாளர்கள் இயக்கம் (சஃபாய் கர்மச்சாரி அந்தோலன்) ஒரு பொதுநல வழக்கை உச்சநீதிமன்றத்தில் தொடுத்தது. இந்த பிண்ணனியில் மத்திய அரசு பல குறைகளைக் களைந்து ஒரு புதிய சட்டத்தை 2013 ல் நிறைவேற்றியது.

2013ம் ஆண்டு சட்டம் மனிதக் கழிவுகளை மனிதர்களே அள்ளுவது என்பதுடன், மனிதர்களைக் கொண்டு கழிவுநீர் தொட்டிகளை சுத்தம் செய்தல், மலக்கழிவு நீர் வடிகால் சுத்தம் செய்தல், அடைப்புகளை நீக்குதல், பாதாள சாக்கடைகளை சுத்தம் செய்தல் போன்றவற்றையும் மனிதர்கள் மூலம் செய்வதற்கு தடை விதித்தது.

இத்தோடு இச்சட்டப் பிரிவுகளை மீறி மேலே கண்ட பணிகளுக்கு மனிதர்களைப் பயன்படுத்தினால், பாதுகாப்பு உபகரணங்கள் வழங்காதிருந்தால் ஜாமீனில் வெளிவர முடியாத குற்றமாகக் கருதப்பட்டு 5 ஆண்டுகள் வரை சிறை, ஐம்பதாயிரம் முதல் இரண்டு லட்சம் வரை அபராதம் என்றும் சட்டம் கடுமையாக்கப் பட்டது.

**வேதனைகளின் உச்சம்**

சட்டம் கடுமையாக்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆகியும் கூட நடைமுறையில் சுணக்கமும், அமலாக்குவதில் தயக்கமும் தொடர்வதால், மனிதக் கழிவுகளை அகற்ற மனிதர்களையே பயன்படுத்தும் அவலமும் தொடர்கிறது.

**மக்கள் விழிப்புணர்வு**

சமீபகாலமாக மலத்தொட்டி, பாதாள சாக்கடை சுத்தம் செய்யும் தொழிலில் ஈடுபடுத்தப்படும் மனிதர்களில் 3,4 பேர் தினந்தோறும் இந்தியாவில் எங்கோ ஒரு இடத்தில் இறந்து கொண்டிருக்கிறார்கள் என்பது வேதனைக்குரிய செய்தி. இந்தவகை தொழிலாளர்களின் சுகாதாரச் சீர்கேடுகள் தடுக்க எந்த வகை பாதுகாப்பும் கிடையாது.

**தீர்வு தான் என்ன?**

மனிதக் கழிவை அகற்றுவதற்கான, மனிதக் கழிவு தொட்டிகள் மற்றும் பாதாள சாக்கடைகளை சுத்தப்படுத்துவதற்கான தொழிலில் நவீன கருவிகளை, தொழில்நுட்பங்களை, இயந்திரங்களைப் பயன்படுத்துவது கட்டாய மயமாக்கப்பட வேண்டும்.

அவலமான இத்தொழிலை மனிதர்கள் மூலம் செய்வது என்பது முற்றிலுமாக ஓட்டை இல்லாத சட்டத்தின் மூலம் தடை செய்யப்பட வேண்டும். அதோடு இந்தவகை விளிம்புநிலை மனிதர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும். சமூக பாதுகாப்பும் உறுதி செய்யப்பட வேண்டும்.

தொடர்புக்கு: 9444956694

# நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்க விவசாய சங்கம் வலியுறுத்தல்

தமிழ்நாடு விவசாய சங்கத்தின் தஞ்சாவூர் ஒன்றிய மாநாடு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. ஜான் பீட்டர் தலைமை வகித்தார். மாநாட்டினை தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மாவட்ட தலைவர் வீர மோகன் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். வேலை அறிக்கையை ஒன்றிய செயலாளர் ஜி.இராமலிங்கம் முன்வைத்தார். மாநாட்டினை வாழ்த்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி, விவசாய சங்க தேசிய குழு உறுப்பினர் அ.பன்னீர்செல்வம், மாநில குழு உறுப்பினர் சோ.பாஸ்கர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட பொருளாளர் என்.பாலசுப்பிர மணியன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் வெ.சேவையா, மாநகர செயலாளர் ஆர்.பிரபாகரன், ஒன்றிய செயலாளர் ஜி.ஜார்ஜ்துரை, இந்திய தேசிய மாதர் சம்மேளன மாவட்ட செயலாளர் ம.விஜயலட்சுமி உள்ளிட்டார் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர்.

மாநாட்டில் தலைவராக ஆர்.கே. செல்வகுமார், துணைத் தலைவராக எஸ்.சீத்தாராமன், செயலாளராக ஜி.இராமலிங்கம், துணை செயலாளராக ஏ.ஜான்பீட்டர், பொருளாளராக பரமசிவம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். முடிவில் தலைவர் ஆர்.கே.செல்வகுமார் நன்றி கூறினார்.

தற்போது பெய்துள்ள கனமழை காரணமாக தஞ்சை மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் அறுவடைக்கு தயாரான நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன, தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணம் போதுமானதல்ல. விவசாயிகள் கடன் வாங்கி விவசாயம் செய்துள்ள நிலையில் தற்போது பாதிக்கப்பட்டுள்ள நெல் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 35 ஆயிரம் தமிழ்நாடு அரசு நிவாரணம் அறிவித்திட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1ம் பக்கத் தொடர்ச்சி

மைதானத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி தலைமை வகித்தார். மாநிலக்குழு உறுப்பினர் பாலமுருகன் முன்னிலை வகித்தார். தேசியக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், மாவட்ட துணை செயலாளர் சமுத்தரம் ஆகியோர் பேசினர். மாநிலக்குழு உறுப்பினர் செந்தில்குமார், இடைக்கமிட்டி செயலாளர்கள் கணேசமூர்த்தி, இராமச்சந்திரன், ஜீவா, சாமிநாதன், நடராஜன், சக்கனன், முனியசாமி, செல்வம், பலவேசம், வேலுச்சாமி, நகர செயலாளர் முத்துக்குமார், மாதர்சங்க மாரீஸ்வரி, மணிமேகலை உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**கும்பகோணம்:** கும்பகோணம் தலைமை அஞ்சலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் மு.அ.பாரதி தலைமை வகித்தார். மாநில செயற்குழு உறுப்பினர் வை.சிவபுண்ணியம் கோரிக்கைகளை விளக்கி பேசினார்.

மாவட்ட நிர்வாகிகள் ஆர்.செந்தில்குமார் ஆர்.தில்லைவனம், ஏ.ஜி.பாலன், ஏ.ராஜேந்திரன், ஆர்.ராமச்சந்திரன், சாமு.தர்மராஜன், டி.கண்ணகி உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

**கோவை:** கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் அருகில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பி.மௌனசாமி தலைமை தாங்கினார்.

ஆர்ப்பாட்டத்தை விளக்கி மாநில பொருளாளர் எம். ஆறுமுகம் பேசினார். மாவட்ட செயலாளர் சி. சிவசாமி, மாவட்ட துணை செயலாளர் எம்.குணசேகர், மாவட்ட பொருளாளர் சி.தங்கவேல், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் கே.எம். செல்வராஜ், கே.ரவீந்திரன், கே. சாந்தி சந்திரன், வி.ஆர். பாண்டியன், மு.வ. கல்யாணசுந்தரம், மற்றும் மாமன்ற உறுப்பினர் பிரபா ரவீந்திரன், த.க.இ.பெ. மாவட்ட செயலாளர் ப.பா.ரமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**நெல்லை:** நெல்லை மாவட்டம் வள்ளியூர் பேரூராட்சி காமராசர் சிலை முன்பு கலைமுருகன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட செயலாளர் செ. லெட்சுமணன், ஏஐடியூசி மாநில துணைத்தலைவர் ஆர். சடையப்பன், இராதாபுரம் தாலுகா செயலாளர் ஏ.சேதுராமலிங்கம், மாவட்ட துணை செயலாளர் நன்பா முத்துகிருஷ்ணன், சந்தனமுத்து, மாவட்ட குழு உறுப்பினர் எம். எஸ். மணியன் ஆகியோர் உரையாற்றினர். வேம்பு சுப்பையா நன்றி கூறினார்.

**தென்காசி:** தென்காசி மாவட்டம் தென்காசியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட பொருளாளர் டி. சுப்பையா தலைமை தாங்கினார்.

மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர்கள் எம்.எஸ். கிட்டப்பா, பி. வேலு, எஸ்.மாரியப்பன், பரமசிவன், மாவட்டக்குழு உறுப்பினர் மா.கணேசன், ஏஐடியூசி மாவட்ட தலைவர் சி. சுப்பிரமணியன் ஒன்றிய செயலாளர் ஏ. சம்சுதீன் ஜனசக்தி நிருபர் கே.பழனிச்சாமி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தென்காசி மாவட்டம் இடைகாலில் வீதி வீதியாக தெருமுனை பிரச்சாரம் ஜே. கனி தலைமையில் நடைபெற்றது!

வி.தொ.ச. மாவட்ட செயலாளர் எம்.எஸ். முத்துசாமி கண்டன உரையாற்றினார்.

ஒன்றிய செயலாளர் அ.சம்சுதீன், வி.தொ.ச. மாவட்ட துணைசெயலாளர் மா. கணேசன், நகரச் செயலாளர் அ.காஜாமுகைதீன் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்!

**மயிலாடுதுறை:** மயிலாடுதுறை மாவட்டத்தில் மாவட்ட செயலாளர் அ. சீனிவாசன் தலைமையில், ஆர். இடும்பையன், பி.வீரராஜ், எஸ்.சி.கணபதி, கே. ராமன், கே.சிவராமன், எஸ். மனோன்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம். செல்வராஜ் கோரிக்கையை விளக்கி பேசினார். மாவட்ட துணை செயலாளர் கே.ராமன் நன்றி கூறினார்.

**கரூர்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஏஐடியூசி கரூர் மாவட்ட குழுக்களின் சார்பில் கரூர் தலைமை தபால்நிலையம் அருகில் மாவட்ட செயலாளர் கே.என். நாட்ராயன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட துணைச் செயலாளர் கே.சண்முகம், மாவட்ட, ஏஐடியூசி பொதுச் செயலாளர் ஜி.பி.எஸ்.வடிவேல், கட்சியின் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எம்.ரத்தினம், மாவட்ட பொருளாளர் ஆர்.ராஜேந்திரன், நகர செயலாளர்கள் கரூர் எஸ்.கார்த்திகேயன், இனாம் கரூர் எம்.லட்சுமி காந்தன், ஏஐடியூசி மாவட்ட தலைவர் கே.குப்புசாமி மற்றும் கட்சியின் நிர்வாகிகள் பங்கேற்று முழக்கம் எழுப்பினர்.

**செங்கல்பட்டு:** மாவட்ட தலைநகர் செங்கல்பட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் ஏ.ராஜ்குமார் தலைமை தாங்கினார். முன்னாள் மாவட்ட செயலாளர் எல்.மேகநாதன் துவக்கி வைத்து உரையாற்றினார். த.ஒ.வா.இ. மாவட்ட செயலாளர் பி.எஸ்.எல்லப்பன், ஏஐடியூசி மாநில துணைத்தலைவர் எம்.சங்கையா, மாவட்ட துணைச் செயலாளர் வி.வீராசாமி, மாவட்ட பொருளாளர் எஸ்.சதீஷ், மாவட்ட குழு உறுப்பினர் கே.வி.சேகுவாராதாஸ், முதலப்பண்ணை சங்க செயலாளர் பூஷ்பராணி ஆகியோர் கண்டண உரையாற்றினர். கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் பங்கேற்று நிறைவுரையாற்றினார். செங்கல்பட்டு தொகுதி செயலாளர் எஸ்.விஜயன் நன்றி கூறினார்.

**திருச்சி புறநகர்:** திருச்சி மாநகர், புறநகர் மாவட்ட குழுக்களின் சார்பில் திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் ஏ.ஐ.டி.யு.சி மாவட்ட பொது செயலாளர் மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் மாநில நிர்வாக குழு உறுப்பினர் த.இந்திரஜித், மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, புறநகர் செயலாளர் எஸ்.ராஜ் குமார், மாநகர் துணை செயலாளர் சி. செல்வகுமார். புறநகர் துணை செயலாளர் த.தங்கமணி, ஆர்.பழனிச்சாமி, மாநகர் பொருளாளர் சொக்கி சண்முகம், புறநகர் பொருளாளர் ப.பக்கிரிசாமி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

**குமரி:** குமரி மாவட்டத்தில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தை கலை இலக்கிய பெருமன்ற மாநில துணைத் தலைவர் எஸ்.கே.கங்கா துவக்கி வைத்தார். ஏ.ஐ.டி.யு.சி.யின் மாவட்டச் செயலாளர் சுரேஷ் மேசியதாஸ், மாவட்டத்தலைவர் எஸ். அனில்குமார், மாவட்டக்குழு உறுப்பினர் வி.கல்யாணசுந்தரம், இந்திய மாதர் தேசிய சம்மேளன குமரி மாவட்ட அமைப்பாளர் ஆர்.செல்வராணி, நாகர்கோவில் மாநகர செயலாளர் ஆர்.இசக்கிமுத்து, ஆரல் நகரச் செயலாளர் அருள்குமார் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

அனைத்திந்திய முற்போக்கு பேரவையின் மாநில துணைத் தலைவர் சுந்தரம் ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்தார்.

**புதுக்கோட்டை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் புதுக்கோட்டை அண்ணா சிலை அருகில் மாவட்ட செயலாளர் த.செங்கோடன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. துணைச் செயலாளர் கே.ஆர். தர்மராஜன், ஏ.ராஜேந்திரன்














ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வி.தொ.ச. மாவட்ட செயலாளர் ஏ.எல். ராஜு, வி.ச. தேசிய குழு உறுப்பினர் மு.மாதவன், தொழிற்சங்க கௌரவ தலைவர் வி.சிங்கமுத்து, ஏஐடியுசி பொதுச் செயலாளர் ப.ஜீவானந்தம், சிபிஐ மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எஸ். ராஜேந்திரன், எஸ்.நடராஜன் உள்ளிட்ட கட்சியின் நிர்வாகிகள் பங்கேற்று முழக்கம் எழுப்பினர்.

**தருமபுரி:** தருமபுரி தொலைபேசி நிலையம் முன்பு நடைபெற்ற ஆர்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் எஸ்.கலைச்செல்வம் தலைமை வகித்தார். மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.தேவராசன் ஆர்பாட்டத்தை துவக்கி வைத்து பேசினார். மாவட்ட துணை செயலாளர்கள் கா.சி.தமிழ்க்குமரன்,எம். மாதேஸ்வரன்,மாநிலக்குழு உறுப்பினர்கள் எஸ்.சின்னசாமி,எஸ்.கமலாமூர்த்தி ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

ஆர்பாட்டத்தில் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் புள்ளாறு, வட்டார செயலாளர்கள் நல்லம்பள்ளி, பிரசாத், இண்டூர் மாது, பாப்பாரப்பட்டி பெருமாள், பாலக்கோடு மாதப்பன், அரூர் சிற்றறரசு, பாப்பிரெட்டிப்பட்டி சுப்ரமணி, ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி, மாவட்ட துதைத்தலைவர் ஆர்.சுதர்சனன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு ஒன்றிய அரசை கண்டித்து முழக்கங்களை எழுப்பினர். சாமிநாதன் நன்றி கூறினார்.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் தலைமை அஞ் சலகம் முன்பு நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தெற்கு மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி தலைமை வகித்தார். மாவட்ட துணைச் செயலாளர் கோ.சக்திவேல், பொருளாளர் என்.பாலசுப்பிர மணியன், மாவட்ட நிர்வாகிகள் சி.சந்திரகுமார், சி.பக்கிரிசாமி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோரிக்கைகளை விளக்கி மூத்த தலைவர் ஜி.கிருஷ்ணன், வி.ச. மாவட்ட தலைவர் வீரமோகன், வி.தொ.ச மாவட்ட தலைவர் ரெ.கோவிந்தராசு, ஏ ஐ டி யூ சி மாவட்ட தலைவர் வெ.சேவையா உள்ளிட்டோர் உரையாற்றினார்.

**குடியாத்தம்:** குடியாத்தம் புதிய பேருந்து நிலையத்தில் ஒன்றிய துணைச் செயலாளர் பிரேம்குமார் தலைமையில், த.ஆனந்தன் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வேலாயுதம், ஜீவா, அஷ்ரப் அலி, அக்பர், ஜெயராமன், மகாலிங்கம், தங்கவேலு, மகேஷ் பாபு பொருளாளர் மற்றும் பேரணாம்பட்டு நா.சே.தலித்பாஸ்கர் உள்ளிட்ட ஏராளமானோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

**பரமக்குடி:** இராமநாதபுரம் மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாவட்டச் செயலாளர் என் எஸ் பெருமாள் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர்




என்.கே. ராஜன், கைத்தறி சம்மேளன பொதுச் செயலாளர் எஸ்.பி.ராதா, பரமக்குடி சிபிஐ நகர் செயலாளர் கே.ஆர்.சுப்பிரமணியன், வி.ச. மாவட்ட தலைவர் கே.ஜீவா உள்ளிட்டோர் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.

**மதுரை மாநகர்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட குழுவின் சார்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன் தலைமை தாங்கினார்.

மதுரை மாவட்ட ஏஐடியூசி செயலாளர் கே.சேது, மாதர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் பா.ராஜலட்சுமி முன்னிலை வகித்தனர்.

பகுதி செயலாளர்கள் பா.சுமதி, ஜனசக்தி என்ஜீவா, ஆர்.ரவிச்சந்திரன், ஜெயந்திநந்தாசிங், மாவட்ட பொருளாளர் எம்.இருளாண்டி பங்கேற்க மதுரை மாவட்ட ஏஐடியூசி தலைவர் எம்.நந்தாசிங் கண்டன ஆர்ப்பாட்டத்தில் நிறைவுரையாற்றினார்.

**மதுரை புறநகர்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புறநகர் மாவட்டம் சார்பில், மதுரை சமயநல்லூர் பேருந்து நிலையம் முன்பு மேற்கு ஒன்றியச் செயலாளர் கண்ணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஏ.ஐ.டி.யு.சி மாவட்டத் தலைவர் நந்தாசிங், த.வி.மா.செ. சந்தனம், மாநிலக் குழு பயிற்சி உறுப்பினர் நாகஜோதி, புறநகர் மாவட்டச் செயலாளர் முத்துவேல் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் காளிதாஸ் சிறப்பு நிறைவுரை ஆற்றினார். பெத்தனன் நன்றியுரை கூறினார்.

**கள்ளக்குறிச்சி:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கள்ளக்குறிச்சி அம்பேத்கர் சிலை அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் கே.ராமசாமி தலைமை தாங்கினார். இதில் முன்னாள் மாநில குழு ஏ.வி. சரவணன் கண்டன உரை நிகழ்த்தினார். தொடர்ந்து வி.தொ.ச. மாவட்ட செயலாளர் கே.எஸ். அப்பாவு, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் கலியபெருமாள், த.ஒ.வா.இ. மாவட்ட செயலாளர் வெங்கடேசன், வி.ச. மாவட்ட செயலாளர் சுப்பிரமணியன், தஒவாஇ மாவட்ட துணைத் தலைவர் கோவிந்தராஜ், இன்சாப் மாவட்ட செயலாளர் சையத் கரீம், ஏ ஐ ஒய் எஃப் மாவட்ட தலைவர் விஜய், மாவட்ட செயலாளர் கணேசன் ஆகியோர் கண்டித்து பேசினர். ரிஷிவந்தியம் ஒன்றிய செயலாளர் தேவேந்திரன் நன்றி கூறினார்.

**வடசென்னை:** வடசென்னை பெரம்பூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்ட துணை செயலாளர் ஜீ.சுப்ரமணி தலைமை தாங்கினார்.

பெரம்பூர் தொகுதி செயலாளர் இரா.கோட்டி சுரேஷ் வரவேற்புரையாற்றினார்.

ஏஐடியுசி பொதுச்செயலாளர் இராதாகிருஷ்ணன், ஏஐடியுசி வடசென்னை மாவட்ட தலைவர் எம்.எஸ். மூர்த்தி, சிபிஐ வடசென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, மாவட்ட பொருளாளர் கீ.சு.குமார், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் ஏ.சுப்பிரமணி, வடசென்னை மாவட்ட துணை செயலாளர் எம்.ஜெய்சங்கர், மாதர் சம்மேளன மாவட்ட செயலாளர் டி.செண்பகம் ஆகியோர் கண்டன உரையாற்றினர். மாணவர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர் இரா.இராமசாமி நன்றி கூறினார்.

**மத்திய சென்னை:** மத்திய சென்னை சார்பில் அம்பத்தூர் எஸ்டேட் பஸ் நிலையத்தில்நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு அம்பத்தூர் பகுதிச் செயலாளர் இரா. விஜயகுமார் தலைமை தாங்கினார். மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் கண்டன உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் பா.கருணாநிதி, துணைச் செயலாளர்கள் ப.மாரியப்பன், ஆர்.எஸ்.ரஞ்சித், பொருளாளர் மு.வரதன், கட்டட சங்க மாநிலச் செயலாளர்கள் இரா.துரைசாமி, வில்லிவாக்கம் ஏழுமலை, எம்.வி.ஜெகநாதன், என்.கோபிநாதன், லோகநாதன், இம்ரான், மாணிக்கவல்லி நாச்சியப்பன், தனலட்சுமி, சுஜாதா உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர். க.செல்வகுமார் நன்றி கூறினார்.








இளசை கணேசன்



# பத்திரிகையாளர்கள் நிலை:

**இன்றைய உலகமயச் சூழலில் அரசியலில், ஆட்சியில் ஊடகங்கள் முக்கிய பங்காற்றி வருகின்றன. இந்தச் சூழலில் பத்திரிகை துறையை தேர்ந்தெடுத்து செயல்படுவோர்க்கு..**

- ◆ பத்திரிகையாளர் யார்?
- ◆ பத்திரிகையாளர் நிலை நேற்று இன்று நாளை!

**என்ற இரண்டு அம்சங்கள் பற்றி முக்கியமாக தெரிந்து கொள்ள வேண்டும்.**

பொதுவாக பத்திரிக்கைத்துறை களில் பணியாற்றக்கூடிய அனைவருமே பத்திரிகையாளர்கள் என்று கருதப்படுகிறார்கள்.

இது பொதுவான வரையறைதான், இதன் உள்ளடக்கம் மிகவும் முக்கியமானது. கூர்மையானது,

பத்திரிகை, ஊடகம் இரண்டும் வேறு வேறானது அல்ல. பத்திரிகை என்பதின் வளர்ச்சிக் கட்ட வடிவம்தான் ஊடகம் என்பதாகும்

இன்றைய சூழலில் மூன்று வகையான ஊடகப் பிரிவுகள் இருக்கின்றன,

1. அச்சு ஊடகம் 2. ஒலி ஊடகம் 3. காட்சி ஊடகம்.

ஊடக கட்டமைப்புகளும் மூன்று வகையாக இருக்கின்றன.

1. மெகா (பெரிய) ஊடகங்கள். 2. நடுத்தர ஊடகங்கள். 3. சிறிய ஊடகங்கள்.

ஊடக அமைப்புகளில் செயல்படும் பணியாளர்கள் அனைவரும் பத்திரிகை யாளர்களா?

வெளியிலிருந்து செய்திகள், தகவல்கள், பேட்டிகள், கட்டுரைகள் தருவோர்கள் பத்திரிகையாளர்களா?

ஊடகங்களை உடமையாக வைத்திருக்கும், உரிமையாளர்கள் பத்திரிகையாளர்களா?.

ஒரு சில நிருபர்களை மட்டும் செய்தியாளராக அரசாங்கம் அடையாளப் படுத்துகிறதே! அவர்கள் தான் பத்திரிகை யாளர்களா?

இவர்கள் யாவரும் பத்திரிக்கை துறையை பிரதிநிதித்துவப் படுத்துவார்கள். பத்திரிகை துறையோடு சம்பந்தப்பட்டவர்கள் அவசியமானவர்கள் என்றே கூற முடியும்.

அப்படியானால் பத்திரிகையாளர் என்பவர் யார்?

''சமுதாயத்தை அடிப்படையில் அறிந்து , புரிந்து கொள்பவன்!

- சமுதாய அடிப்படையை மக்களிடம் பிரதிபலிப்பவன்!
- சமுதாய அடிப்படையை மாற்றத் துடிப்பவன்!

சுருக்கமாகச் சொன்னால் ''சமுதாய பொறுப்பு உள்ளவன்'' எவனோ, அவனே உண்மையான பத்திரிகையாளன்.

''சமூகப் பொறுப்புணர்வு இல்லாத'' யாரும் பத்திரிகையாளர் என்ற உள்ளடக்கத்திற்கு வர மாட்டார்கள்.

- சமுதாயம் என்றால் என்ன?
- சமுதாயம் எதில் இயங்குகிறது?
- சமுதாய இயக்கத்தின் இயங்கு சக்தி எது?
- சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் எப்படி உருவானது? விளைவுகள் யாவை?
- சமூக மாற்றத்தின் அடிப்படை எது?

இவற்றைப் பற்றி அறியாமல், புரியாமல் சமூகப் பொறுப்புள்ள பத்ரிகைகாரனாக ஆக முடியாது!

இவற்றை விளக்குவதற்கு இந்த கட்டுரையில் இடம் போதாது. தேடித் தெரிந்து கொள்ளுங்கள்.



அடுத்து பத்திரிகையாளர்களின் நிலை ''நேற்று இன்று நாளை!''

இந்திய சுதந்திரத்திற்கு முன்பு உள்ள காலகட்டம் நேற்று. அதற்குப் பின்பு உள்ள காலகட்டம் இன்று. இனி வரும் எதிர்காலம் நாளை என்றவாறு வகைப்படுத்திக் கொள்ளலாம்..

நேற்றைய காலத்தில் பத்திரிகைகளையும் பத்திரிகையாளர்களையும் பிரித்துப் பார்க்க முடியாதவாறு இருந்தது.

- விடுதலைப் போரில் மலர்ந்தவை.
- விடுதலைப் போராட்டத்தோடு பிரிக்க முடியாமல் இணைந்தவை.
- விடுதலைப் போரின் முன்னணிப் படையாய் திகழ்ந்தவை.
- இந்திய விடுதலை என்ற இலக்கு இருந்தது.
- அந்நிய ஆங்கிலேய ஏகாதிபத்தியம் என்ற எதிரி தெளிவாக தெரிந்தது.
- விடுதலைப் போராட்டம் என்ற பாதை அமைந்தது.
- அடக்குமுறைகள் தகர்க்கப்பட்டன.
- வணிக நோக்கம் என்பதை விட 'விடுதலை வேட்கை! குறியாக இருந்து.

1780 ல் முதன் முதலில் வெளிவந்த பத்திரிக்கை 'வங்காள கெசட் 'அந்நிய ஆட்சியை எதிர்த்து முழங்கியது.

கடுமையான அடக்கு முறையை சந்தித்தது. அந்தப் பத்திரிக்கையின் ஆசிரியர் ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹக்கி என்பவருக்கு ஓராண்டு சிறை தண்டனையும் 2000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது

1799 இல் பத்திரிகை ஒழுங்குமுறை தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

இந்தியாவின் முதல் பத்திரிக்கையாளர் ராஜாராம் மோகன் ராய், இவருக்கு பின்னர் வந்தவர் ஜேம்ஸ் பக்கிங்காம், இருவரும் பத்திரிகை துறையின் வளர்ச்சிக்கும், கருத்து சுதந்திரத்திற்கும் பாடுபட்டனர்.

விடுதலைப் போரில் முன்னணித் தலைவர்கள் பத்திரிகையாளர்களாக திகழ்ந்தனர்

ராஜாராம் மோகன்ராய், பக்கிங்காம், பாலகங்காதர திலகர், மகாத்மா காந்தி, அரவிந்தர், பாரதியார், சுப்பிரமணிய சிவா, வ. உ .சி, சிங்காரவேலர், அயோத்திதாசர், இரட்டைமலை சீனிவாசன், தந்தை பெரியார், ஜீவானந்தம், அறிஞர் அண்ணா.. இவர்களோடு இன்னும் பலரும்.

பத்திரிகையாளர்களாக திகழ்ந்து விடுதலைப் போரை கூர்மைப்படுத்தினர்.

1947 ஆகஸ்ட் 15 இந்திய சுதந்திரம் வரை பத்திரிகையாளர்களின் விடுதலைப் போராட்டம் தொய்வின்றி தொடர்ந்து.

அடுத்தது பத்திரிகையாளர்களின் இன்றைய நிலை:

இந்திய 'அரசியல் விடுதலை' பெற்றுத்தந்த விடுதலைப் போராட்டம் அதன் தொடர்ச்சியாக...

- பொருளாதார விடுதலை
- சமூக விடுதலை
- பண்பாட்டு விடுதலை

என்பதை நோக்கி பயணிக்கவில்லை.

இந்திய விடுதலையை சாதகமாக பயன்படுத்தி முதலாளித்துவம் வலுவாக காலுன்றத் தொடங்கி விட்டது . பத்திரிகை துறையிலும் முதலாளித்துவ ஆதிக்கம், மேலோங்கியது.

இந்தச் சூழலில்...

- வர்க்க முரண்பாடு
- பத்திரிகை சுதந்தரம்
- ஜனநாயகம்.
- ஜனநாயகத்தின் நான்காவது தூண்.

இந்த நான்கைப் பற்றி பத்திரிகையாளர் கள் முக்கியமாக அறிந்து புரிந்து கொள்ள வேண்டும்.

குளிரூட்டப்பட்ட அறையில் கோட், சூட் போட்டுக்கொண்டு லட்சக்கணக்கில் ஊதியம் பெற்றாலும் அடிப்படையில் அவர் உழைக்கும் பத்திரிக்கையாளர்தான்.

ஜனநாயகத்தின் நான்காவது தூணான பத்திரிகை நிறுவனத்தை நடத்தினாலும் அவர்கள் உழைக்கும் பத்திரிகையாளர்கள் அல்ல. உழைப்பைச் சுரண்டும் உடமையாளர்கள்தான்.

- உழைப்பை சுரண்டும் ஊடக உடமையாளர்கள்.
- சுரண்டப்படும் உழைக்கும் பத்திரிகையாளர்கள்.

என்று பத்திரிகை துறை இரண்டாகப் பிளவு பட்டுள்ளது.

இந்த இரண்டும் எதிர் எதிர் வர்க்கங்கள்! எதிர் எதிர் வர்க்க நலன்கள்! எனவே வர்க்க முரண்பாடு தவிர்க்க முடியாது.

பத்திரிகை நிறுவனங்கள் மற்றும் பத்திரிகை துறைகளில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கு இந்த வர்க்க முரண்பாடுதான் அடிப்படை.

1. பணி பாதுகாப்பு.
2. ஊதியக்குழு நிர்ணயித்த ஊதியம்.
3. போராடிப் பெற்ற உரிமைகள்.

இந்த மூன்று முக்கிய உரிமைகளுக்கு கூட எந்தவித உத்தரவாதம் இல்லை.

ஊடக ஜாம்பவானகளை கூட நினைத்த மாத்திரத்தில் ஊடக நிறுவனங்கள் வெளியேற்றுகின்றன.

தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை அவர்களை தாங்கிப் பிடித்து, அதீத ஜனநாயகம் பேசும் ஜாம்பவான் பாண்டேவுக்கும் இதே கதி ஏற்பட்டது

இவர்களுக்கே இந்த கதி என்றால் சாதாரண பத்திரிகை மற்றும் ஊடகவியலாளர்கள் பற்றி சொல்லவும் வேண்டுமோ?

அரசு நியமிக்கும் சம்பள கமிஷன் உழைப்புக்கேற்ற ஊதியத்தை நிர்ணயம் செய்வதில்லை குறைந்தபட்ச ஊதியத்தைதான் நிர்ணயம் செய்கின்றன.

மஜிதியா சம்பளக் குழு பத்திரிகையாளர் களுக்காக பரிந்துரைத்த குறைந்தபட்ச சம்பளத்தையாவது ஊடக நிறுவனங்கள் வழங்குகின்றனவா?

அரசாங்கம் எப்போதாவது கண் காணித்ததுண்டா? அரசு பதில் கூறுமா?

பத்திரிகையாளர்கள் போராடிப் பெற்ற உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கே கடுமையாக போராட வேண்டிய சூழல் இருக்கிறது.

போராட்டம் இல்லாமல் யாராட்டமும் செல்லாது.

பத்திரிகையாளர்கள் இதை எப்போதும் நெஞ்சில் நிறுத்த வேண்டும்.

காலநேரம் பாராமல் கடுமையான எதிர்ப்புகள், ஆபத்துகளை எதிர்கொண்டு ஊண், உறக்கமின்றி, மெய் வருத்தம் பாராமல் செய்தி சேகரித்து வந்தாலும் அப்படியே வெளிவந்து விடாது.

ஊடகத்துறையின் உடமையாளர்களின் வர்க்க ,அரசியல் நிலைப்பாட்டிற்கு ஏற்றவாறே செய்திகள் வெளியிடப்படும்.

உழைக்கும் பத்திரிகையாளர்களின் சிந்தனை விருப்பம் எளிதாக நிறைவேறாது! இதுவும் வர்க்க முரண்பாட்டில் ஒரு அம்சம்தான்.

பத்திரிகை சுதந்திரம் பற்றி தோன்றிய காலம் தொட்டு இன்று வரை பேசப்பட்டு வருகிறது.

சுதந்திரமாக செய்திகளை கருத்துக்களை சொல்லும் உரிமை என்பது தான் பத்திரிகை சுதந்திரம் நடைமுறையில் இது சாத்தியமா? சாத்தியமில்லை!

எனவே பத்திரிகை சுதந்திரம் என்பது பத்திரிகையாளர்களுக்கா? அல்லது ஊடக உடமையாளர்களுக்கா?

இந்தக் கேள்விக்கு பத்திரிகையாளர்கள் விடை கண்டாக வேண்டும்.

ஜனநாயகம் என்றால் என்ன?

ஜனம்+ நாயகம்= ஜனநாயகம்.

நாயகம் என்றால் ஆளுமை என்று பொருள். மக்களின் ஆளுமை என்பதே ஜனநாயகமாகும்.

தேர்தலில் பெரும்பான்மையோர் வாக்களித்து தேர்ந்தெடுப்பதோடு ஜனநாயகம் முடிந்து விடாது.

1.பொருளாதாரம் 2. சமூகம் 3. அரசியல் 4. பண்பாடு

இவற்றில் பெரும்பான்மையான மக்கள் அன்றாடம் ஆளுமை செலுத்துவதே உண்மையான ஜனநாயகம்.

இத்தகைய ஜனநாயகத்தை உயர்த்திப்பிடித்து நடைமுறைக்கு கொண்டு வருவதுதான் பத்திரிகையாளர்களின் தலையாய கடமை!

ஜனநாயகத்தின் நான்கு தூண்கள் எவை? என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், 'ஜனநாயகத்தின் நான்காவது தூண்' என்பது எப்படி வந்தது? என்பதை

தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆளும் வர்க்கமோ அல்லது அதிகார வர்க்கமோ பத்திரிக்கையாளர்களுக்கு இந்த தகுதியை வழங்கிட வில்லை.

பிரஞ்சுப் புரட்சியில் புரட்சியாளர்கள் பத்திரிகைகளை கைப்பற்றி தங்களுக்கு சாதகமாக மாற்றினர்.

பத்திரிகைகளின் ஒன்றுபட்ட செயல்பாட்டுக் கொள்கையை உருவாக்கி "பத்திரிகைகள் ஜனநாயகத்தின் நான்காவது தூண்' என்று பிரகடனம் செய்தனர்.

பின்பு உலகம் முழுவதும் உள்ள பத்திரிகையாளர்கள் இதை ஏற்று பிரபலப்படுத்தினர். இதற்குப் பின்பு அரசுகளும், அரசியல் கட்சிகளும் ஏற்கத்

பத்திரிகையாளர்களின் நோக்கம் லட்சியம் கொள்கை ஒற்றுமை போன்றவை சிதறடிக்கப் படுகின்றன. இதன் விளைவு...

காட்சி ஊடகங்கள் அச்சு ஊடகங்களை மதிப்பதில்லை

மெகா ஊடகங்கள் நடுத்தர ஊடகங்களை மதிப்பதில்லை.

நடுத்தர ஊடகங்கள் சிறு ஊடகங்களை, சிறுபத்திரிக்கைகளை மதிப்பதில்லை.

மெகா ஊடகங்களும் மெகா பத்திரிகைகளும் எல்லா வகையிலும் 'ஆதிக்கம்' செலுத்துகின்றன.

நடுத்தர ஊடகங்களும் பத்திரிகைகளும் தாக்குப்பிடிக்க முடியாமல் தடுமாறுகின்றன.

சிறு ஊடகங்களும் சிறு பத்திரிகைகளும் சிற்றெறும்பு கூட்டத்தில் சிக்கிய 'புழுவாக'

ஒருவருக்கொருவர் ஏராளமான புகார் மனுக்களை தாக்கல் செய்கிறார்கள்.

இந்த இரண்டு போக்குகளும் எந்த விதத்திலும் பத்திரிகையாளர் சங்கங் களுக்கும் பத்திரிகை யாளர்களுக்கும் நல்ல விளைவை தரப் போவதில்லை

பத்திரிகையாளர்களிடையே ஒற்றுமை இல்லாத காரணத்தால்.

● பத்திரிக்கையாளர்களுக்கான அரசு அடையாள அட்டை பெறுதல்.

● பத்திரிகையாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக சேருதல். மற்றும் நலவாரியத்தின் வெளிப்படையான செயல்பாடு.

● பத்திரிகையாளர்கள் நலவாரிய குழுவில் பத்திரிகையாளர் சங்கங்களுக்கு

# : நேற்று - இன்று - நாளை!

தொடங்கின

ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்பது புரட்சிகர செயல்பாட்டில், புரட்சிகர கொள்கையாக உதித்த ஒன்றாகும்.

ஜனநாயகத்தின் இந்த நான்கு தூண்களையும் சாய விடாமல் பாதுகாத்து தாங்கிப் பிடிப்பது மக்கள் ஆளுமை என்னும் ஜனநாயகம் தான்.

இந்த உண்மை உள்ளடக்க மாண்பை முதலாளித்துவம் ஒருபோதும் ஏற்காது.

சில அரசியல் கட்சிகள், மற்றும் ஆளும் அரசுக்கு சாதகமாக...

பத்திரிக்கை நிறுவன ஆதிக்கமாக, பல்வேறு விதங்களில் பத்திரிகையாளர்கள் பிரித்தாளப்படுகிறார்கள்.

துடிக்கின்றன.

பெரிய பத்திரிகையாளர்கள் சங்கங்கள் சிறிய பத்திரிகையாளர் சங்கங்களை மதிப்பதில்லை.

இவைகளுக்கிடையே வேறுபாடுகள் விரிவடைந்து முரண்பாடுகளாக சித்தரிக்கப்படுகின்றன.

இதன் விளைவு பத்திரிகையாளர் சங்கங்களிலும் பத்திரிகையாளர்களிடமும் பிரதிபலிக்கிறது.

1. பயன்படுத்தக்கூடாத கடுமையான சொற்களால் இணையதளத்தின் மூலம் தாக்குதல்கள் தொடுக்கப்படுகின்றன.

2. அரசு பத்திரிக்கை துறையில்

பிரதிநிதித்துவம்.

போன்ற முக்கியமானவற்றை நடைமுறைப்படுத்துவதற்கே கூட போராட வேண்டியது இருக்கிறது

இதில் பத்திரிகையாளர்கள், குறிப்பாக சிறு பத்திரிகையாளர்கள் நேரடிப் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

அடுத்து பத்திரிகையாளர்கள் நிலை நாளை:

எதிர்காலம் என்பதால் நாளை நிலை எப்படி இருக்கும் என்பதை விட எப்படி இருக்க வேண்டும் என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும்.

"காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீதான்"

என்ற பாவேந்தரின் கூற்றை மெய்ப்பிப்பதாக பத்திரிக்கைகள் திகழ வேண்டும்.

அறிவுக் கண்ணை சரியாகத் திறந்தால் பிறவி குருடனும் கண் பெறுவான்"

என்ற பட்டுக்கோட்டையின் பாடல் வரிகளை மெய்ப்பிப்பதாக பத்திரிகையாளர்களின் செயல்பாடு அமைய வேண்டும்.

சமூகப் பொறுப்புள்ளவனாக பத்திரிகையாளர்கள் உருவாகாமல் மக்களின் அறிவுக் கண்ணை திறக்க முடியாது!

திக்குத் தெரியாத காட்டில் திசை தெரியாமல் திரிபவனைப் போன்று பத்திரிகையாளர்கள் இருக்கக் கூடாது.

யாரோடு ஒன்றுபட வேண்டும்?

யாரோடு முரண்பட வேண்டும்

என்ற கொள்கையில் பத்திரிகையாளர்கள் தெளிவாக இருக்க வேண்டும்

● சமுதாய அடிப்படை மாற்றம்.

● பத்திரிக்கையாளர் நலன்

என்ற இரண்டு தூண்களில் எழுப்பப்பட்ட கொள்கை வழிச் செயல்பாடாக எதிர்காலம் அமைய வேண்டும்

இந்தக் கொள்கை அடிப்படையில் ஒத்த கருத்தோடு பத்திரிகையாளர்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும்,

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கில், அனைவருக்கும் தாழ்வு"

என்ற பாரதியின் வரிகள் மனதில் ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும்

"ஒன்றுபட்டு போர் புரிந்தே உயர்த்துவோம் ஒற்றுமையை

இன்றுடன் தீரட்டும் இன்னல்கள் "

உரிமைகளை வென்றெடுப்போம் சாதனைகள் சமைப்போம்.

தொடர்புக்கு: 8220468816

---



ஜி.ஆர்.இரவீந்திரநாத்

# முதுநிலை மருத்துவ மாணவர்களுக்கு, 3 மாத கட்டாயப் பணி வழங்கும் திட்டத்தை கைவிடுக

**மூன்று ஆண்டு காலம் MD/ MS முது நிலை மருத்துவ படிப்பு பயிலும் மாணவர்கள், அந்த துறை சார்ந்த உயர் சிறப்பு துறைகளிலும், இணையான துறைகளிலும் நேரடியாக பயிற்சி பெற வேண்டிய அவசியம் உள்ளது. அதன் படி அந்த சிறப்பு துறைகளில் 9 முதல் 12 மாதங்கள் வரை பயிற்சி பெற வேண்டும் என்ற நடைமுறை, பாடத்திட்டத்தில் நீண்ட காலமாக உள்ளது.**

அந்த படிப்புக்காலத்தில் இருந்து 3 மாத காலத்தை குறைத்து விட்டு, 3 மாதம் மருத்துவ கல்லூரி அல்லாத மாவட்ட மற்றும் இதர அரசு மருத்துவ மனைகளில், கட்டாயம் பணி புரிய வேண்டும் என்பது தான் DRP திட்டம்.

மாணவர்கள் மூன்று மாதங்களுக்கு பணிபுரிய உள்ள, பல்வேறு அரசு மருத்துவமனைகளில், அம்மாணவர்களுக்கு பயிற்சி வழங்க, அந்த மாணவர்கள் பயிலும் குறிப்பிட்ட MD/MS துறையில் தகுதியான மருத்துவர்களோ, மருத்துவ ஆசிரியர்களோ இருக்கும் வாய்ப்பு இல்லை. அம்மாணவர்கள் சார்ந்த துறையே அந்த மருத்துவ மனைகளில் இல்லாத நிலையும் உள்ளது.எனவே இம் மருத்துவ மனைகளில் DRP மாணவர்கள் பணியில் மட்டுமே ஈடுபடுத்தப்படுவர். கடும் உழைப்புச் சுரண்டலுக்கு ஆளாவர். மாணவர்களின் படிப்பு சார்ந்த, பயிற்சி பெறும் உரிமையும் மறுக்கப்படுகிறது.

எனவே, முதுநிலை மருத்துவ மாணவர்களுக்கு, மூன்று மாத காலம் மாவட்ட மருத்துவமனைகளில் / இதர மருத்துவமனைகளில் கட்டாயப் பணி வழங்கப்படுவதை கைவிட வேண்டும்.

இதை வலியுறுத்தி தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கமும், தமிழ்நாடு உறைவிட டாக்டர்கள் சங்கமும் போராட்டத்தை தொடங்கியுள்ளன.

போராடும் மருத்துவ மாணாக்கர்கள் சங்கத்தினரை, தமிழ்நாடு அரசு உடனடியாக அழைத்துப் பேசி, பிரச்சனையை தீர்க்க வேண்டும்.

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும், ஏற்கனவே காலி பணியிடங்கள் இல்லாத நிலை உள்ளது. அதனால் ஒரு துறையில் MD/MS படித்த மருத்துவர்கள், அவர்கள் படித்த துறைக்கு தொடர்பில்லாத, வேறு துறைகளில் பணி அமர்த்தப்படும் அவல நிலையும் நிலவுகிறது.

இதனால், நோயாளிகளுக்கு துறை சார்ந்த சரியான சிகிச்சை வழங்குவத்தில் பாதிப்பும் ஏற்படுகிறது.

தொடர்ந்து அதிகரித்து வரும் நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப புதிய பணியிடங்கள் நீண்ட காலமாக உருவாக்கப்படவில்லை.

போதிய பணியிடங்கள் இல்லாததால், முதுநிலை மருத்துவம் படித்த ,அரசு மருத்துவர்களாக இல்லாத தனியார் மருத்துவர்களுக்கு (Non Service Post Graduate Medical students), இரண்டு ஆண்டுகளுக்கான, கட்டாயப் பணியைக்கூட (bond postings), அரசு, மருத்துவமனைகளில் வழங்க முடியாத நிலை உள்ளது.

அந்த இரண்டு ஆண்டுகள் கட்டாயப் பணியை முடிந்தவுடன், பணி நிரந்தரம் வழங்கும், நடப்பில் உள்ள நடைமுறையையும் செயல் படுத்த முடியாத நிலை தற்போது உள்ளது.

அது மட்டுமன்றி, இளநிலை மற்றும் முது நிலை மருத்துவப் படிப்பை முடித்துவிட்டு , ஏராளமான மருத்துவர்கள் வேலைவாய்ப்பின்றி சிரமப்படுகின்றனர்.

வெறும் 1021 எம்.பி.பி.எஸ் பதவிக்கான எம்.ஆர்.பி (MRB) தேர்வுக்கு , முது நிலை மருத்துவம் (MD/MS) படித்தவர்கள் உட்பட, 25,000 திற்கும் மேற்பட்ட மருத்துவர்கள் விண்ணப்பித்து உள்ளனர்.

வேலை இல்லா திண்டாட்டம் மிகக் கடுமையாக உள்ளதை,இந்தக் கடும் போட்டி, படம்பிடித்துக் காட்டுகிறது.

இப்பிரச்சனைக்கு அரசு தீர்வுகாண முயலவில்லை.

எனவே ஒருபுறம் காலிப் பணியிடங்களும் நிரப்பப்படவில்லை. மறுபுறம் புதியப் பணியிடங்களையும் அரசு உருவாக்கவில்லை. அதே போல் "பாண்டு" மூலமாக வேலை செய்ய வைக்கும் திட்டத்தையும் அரசு கைவிடுகிறது. இதனால் வேலைவாய்ப்பில்லாத மருத்துவர்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

இந்நிலையில், எதற்காக முதுநிலை மருத்துவ மாணவர்களை மூன்று மாத காலம் , மாவட்ட மருத்துவமனைகளிலும், இதர மருத்துவமனைகளிலும், படிப்பின் பொழுதே பணி அமர்த்த வேண்டும்? என்ற கேள்வி எழுகிறது.

தொடர்ந்து, இனிவரும் காலங்களில், முதுநிலை மருத்துவ மாணவர்களை அதிக அளவில் பயன்படுத்தி, அரசு மருத்துவமனைகளை நடத்திட வேண்டும் என்ற ஒன்றிய அரசின் இத்திட்டம்,வேலை இல்லா திண்டாட்டத்தை மேலும் அதிகரிக்கும்.இது இளம் மருத்துவர்களின் நலன்களுக்கு எதிரானது.

தரமான மருத்துவசிகிச்சை அவர்களுக்கு கிடைக்காமல் செய்துவிடும். தேர்ச்சி பெற்ற மற்றும் சிறந்த அனுபவம் வாய்ந்த மருத்துவர்களின் மூலம் சிகிச்சை பெறும் வாய்ப்பை , பறித்து விடும் .

அது மட்டுமின்றி , முதுநிலை மருத்துவம் படிக்கின்ற மாணவர்களுக்கு முறையான பயிற்சியையும், அரசால் வழங்கப்பட முடியாத நிலை ஏற்படும். வருங்கால சிறப்பு மருத்துவர்களின் தரத்தை மோசமாக பாதிக்கும். எனவே, இத்திட்டத்தை, ஒன்றிய அரசு செயல்படுத்துவது கடும் கண்டனத்திற்குரியது.

இது தமிழ்நாடு மருத்துவர்களின் பாதுகாப்பிற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக அமையும். குறிப்பாக பெண் மருத்துவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகும்.

மூன்று மாத காலப் பணியை முடித்தவுடன், மருத்துவமனையின் நிர்வாகத்திடமிருந்து, "நன்றாக பணி செய்தார், பணி திருப்திகரமாக இருந்தது" என்ற சான்றிதழைப் பெற வேண்டும். அந்த சான்றிதழ் இருந்தால்தான் முதுநிலை மருத்துவப் படிப்பின் இறுதியாண்டு தேர்வையே எழுத முடியும் என்ற நிலை இத்திட்டத்தின் மூலம் உருவாக்கபட்டுள்ளது.

இதனால், மாணவர்கள் அடிமைகள் போல் நடத்தப்படும் நிலை ஏற்படும்.

உடனடியாக, இந்த DRP திட்டத்தை கைவிட வேண்டும்.

அதேபோல் மாவட்ட நலச் சங்கங்கள் மூலம், மருத்துவர்களை, ஒப்பந்த அடிப்படையில், தற்காலிகமாக தமிழ்நாடு அரசு நியமித்து வருவது வருத்தத்தை அளிக்கிறது . இது கடந்த காலத்தில் தி.மு.க அளித்த வாக்குறுதிகளுக்கு எதிரானது. இத்தகைய பணிநியமனம், இளம் மருத்துவர்களின், நிரந்தர வேலை வாய்ப்பை பறித்துவிடும்.

மாவட்ட நலச் சங்கங்கள் மூலம் மருத்துவர்களை, தற்காலிக அடிப்படையில் நியமித்தால், அவர்களை பணி நிரந்தரம் செய்வதில் சிக்கல்கள் ஏற்படும்.

எனவே, தமிழ்நாடு அரசு மாவட்ட நலச் சங்கங்கள் மூலம், மருத்துவர்களை, தற்காலிக அடிப்படையில் பணி நியமனம் செய்வதை உடனடியாக கைவிட வேண்டும்.

மருத்துவ பணியாளர்கள் பணி நியமன ஆணையம் மூலம் தேர்வு நடத்தி, மருத்துவர்களை நிரந்தர அடிப்படையில் மட்டுமே நியமிக்க வேண்டும்.

முது நிலை மருத்துவ மாணவர்களின், இந்த நியாயமான போராட்டத்திற்கு, அனைத்து அரசியல் கட்சிகளும், தொழிற் சங்கங்களும் ,பொதுமக்களும் ஆதரவு தர வேண்டும்.

தொடர்புக்கு: 9940664343

## தலித் மக்கள் மீதான
# தீண்டாமை கொடுமைகளைக் கண்டித்து மார்ச் 14ல் ஆர்ப்பாட்டம்

### அனைத்திந்திய தலித் உரிமைகள் இயக்க தேசியக்குழு கூட்டம் தீர்மானம்



அனைத்திந்திய தலித் உரிமைகள் இயக்கத்தின் தேசியக்குழு கூட்டம் கர்நாடக மாநிலத்தின் கல்புர்கி மாவட்டத்தில் உள்ள பாலி ரிசர்ச் இன்ஸ்டிடியூட்டில் 2023, ஜனவரி 29,30 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

முதல் நாளில் அமைப்பின் அகில இந்திய துணைத்தலைவர் மகாதேவ் பூலே தலைமையில் துவக்க நிகழ்வு நடைபெற்றது.

அகில இந்திய பொதுச் செயலாளர் வி.எஸ்.நிர்மல் அனைவரையும் வரவேற்று பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் ஜான்கி பஸ்வான் துவக்கவுரையாற்றினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கர்நாடகா மாநிலச் செயலாளர் சத்ய சுந்தரேஷ், விவசாயிகள் சங்க மாநிலச் செயலாளர் முகலாமுல்லா, வழக்கறிஞர் பக்கப்பா ஆம்லே, ஜாதி வினாஷ் வேதிகா அமைப்பின் முதல் செயலாளர் மாருதி கோகலே, கட்சியின் மாவட்டச் செயலாளர் மகேஷ் ரத்தோட், ஏஐடியுசி மாநில செயலாளர் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

பொதுச் செயலாளர் வேலை அறிக்கை, அமைப்பு நிலை அறிக்கை, எதிர்கால திட்டங்களை முன் வைத்தார். பல மாநிலங்களிலிருந்து கலந்து கொண்ட தோழர்கள் செயலாளர் அறிக்கை மீது தங்கள் கருத்துக்களை முன் வைத்தனர்.

இரண்டாம் நாளில் அமைப்பின் அகில இந்திய தலைவர் அ.ராமமூர்த்தி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது படம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது. செயலாளர் அறிக்கை மீதான விவாதங்களுக்கு பிறகு நிறைவாக பொதுச் செயலாளர் தொகுப்புரையாற்றினார்.

அமைப்பின் உறுப்பினர் பதிவை அனைத்து மாநிலங்களிலும் உடனடியாக துவங்க அந்தந்த மாநிலக் குழுக்கள் உடனடியாக கூடி திட்டமிட வேண்டும்.

**ஆர்ப்பாட்டம் மார்ச் 14**

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் நடைபெறும் தலித் மக்கள் மீதான தீண்டாமை வன்கொடுமைகள், வன்முறை தாக்குதல்களை கண்டித்தும், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் மார்ச்14ந் தேதி அனைத்து மாநில தலைநகரங்களில் ஆர்ப்பாட்டத்தை நடத்த வேண்டும்.

கோரிக்கைகளை மாநில ஆளுனரிடம் வழங்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

**அம்பேத்கர் பிறந்தநாள் ஏப்ரல்14**

பாபா சாகேப் அம்பேத்கரின் பிறந்த தினத்தை முன்னிட்டு அனைத்து பகுதிகளிலும் விழாக்கள் நடத்தப்பட வேண்டும்.

**மே25.ஆர்ப்பாட்டம்**

அனைத்து மாவட்ட தலை நகரங்களிலும் மாவட்டக் கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

தமிழ்நாட்டிலிருந்து அ.அசரப் அலி, எஸ்.கே.சிவா, எஸ்.கிருஷ்ணன், பி.சுகுமாரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பி.பி.சி. அலுவலகங்களில் வருமான வரித்துறை சோதனை

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

டெல்லி மற்றும் மும்பையில் உள்ள பி.பி.சி அலுவலகங்களில் வருமான வரித்துறை சோதனை நடத்தியுள்ளது. இதற்கு கண்டனம் தெரிவித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பது வருமாறு:

டெல்லி மற்றும் மும்பையில் உள்ள பி.பி.சி அலுவலகங்களில் வருமான வரித்துறை சோதனை நடத்தியுள்ளது. இதனை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு கண்டிக்கிறது. வகுப்புவாத பாசிச கொள்கைகளை விமர்சிப்பவர்கள் மற்றும் அம்பலப்படுத்துபவர்கள் மீது மோடி அரசாங்கம் தாக்குதல் தொடுப்பது வாடிக்கையாகி உள்ளது. 'The Modi Question' என்னும் ஆவணப்படத்தை பி.பி.சி நிறுவனம் சமீபத்தில் ஒளிபரப்பியது நினைவுகூரத்தக்கது. இது மோடி அரசாங்கத்திற்கு எரிச்சலூட்டியது. பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல இடங்களில் இந்த ஆவணப்படத்தை ஒளிபரப்ப மோடி அரசாங்கம் அனுமதிக்கவில்லை. தற்போது, மோடி அரசாங்கம் பி.பி.சி நிறுவனத்தை அச்சுறுத்த அரசு இயந்திரத்தைப் பயன்படுத்தியுள்ளது. ஊடகச் சுதந்திரம் என்பதைப் பொறுத்தவரையில், இது போன்றதொரு நடவடிக்கை தேசத்தின் மதிப்பைச் சீர்குலைப்பதாகும்.

இவ்வாறு கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## திருத்துறைப்பூண்டி அரசுக் கல்லூரியில்
# பேராசிரியர்களை நியமிக்க கோரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்




பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு கீழ் இயங்கும் திருத்துறைப்பூண்டி அரசு கலைக் கல்லூரியில் இந்த ஆண்டிற்கான வகுப்புகள் தொடங்கி சுமார் இரண்டு மாதங்கள் ஆகிவிட்டது, சமூக பணித்துறை என்ற துறையில் இன்றளவும் ஒரு பேராசிரியர் கூட இந்த வகுப்பறைக்கு அமர்த்தவில்லை. இது குறித்து பலமுறை கல்லூரி முதல்வரிடம் அவர்களிடம் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே இதனை கண்டித்தும் பேராசிரியர் காலி பணிகளை உடனடியாக நிரப்பிட வலியுறுத்தி அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாவட்ட துணைச் செயலாளர் மு.மணிபாரதி தலைமையிலும் எஸ் சௌமியா முன்னிலையிலும் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தில் கோரிக்கையை விளக்கி அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநிலத் துணைச் செயலாளர் ஜே.பி.வீரபாண்டியன், மாவட்டத் தலைவர் கே.ஆர்.பாரதசெல்வன் பேசினர். இதில் இளைஞர் பெருமன்ற ஒன்றிய தலைவர் ஜெ.கணேஷ் கல்லூரி பொறுப்பாளர்கள் கவாஸ்கர், அருண்குமார், மதன், நித்திஷ் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

# பெண்களைப் புறக்கணிக்கிறது பட்ஜெட்: மாதர் சம்மேளனம் அறிக்கை

ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை குறித்து இந்திய மாதர் தேசிய சம்மேளன (NFIW) பொதுச் செயலாளர் ஆனி ராஜா விடுத்த அறிக்கை:

"நிதியமைச்சர் தாக்கல் செய்த 2023–24ம் ஆண்டிற்கான ஒன்றிய பட்ஜெட் குறித்து மாதர் சம்மேளனம் ஏமாற்றம் தெரிவிக்கிறது. இந்தியக் குடும்பங்கள் கோவிட்–19 பெருந்தொற்று ஏற்படுத்திய பாதிப்புக்களிலிருந்து மீண்டு வர முடியாமல் தவிக்கும்போது பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்திட்டங்களுக்கான பட்ஜெட் ஒதுக்கீடு கடுமையாக வெட்டப்பட்டுள்ளது. மக்கள் தொகையில் செம்பாதியான பெண்களின் மீது பட்ஜெட்டில் இந்தப் புறக்கணிப்பு பாஜக அரசின் உண்மை முகத்தை அம்பலப்படுத்துகிறது.

இந்திய மக்கள் தொகை அமைப்பில் ஆண்களைவிட பெண்களின் எண்ணிக்கை முதன் முறையாகப் பாதிக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது குறித்துக் குடியரசுத் தலைவர் பெருமிதம் தெரிவித்த அடுத்த நாளே, வெளியான பட்ஜெட்டில் பெண்களுக்கான நிதி ஒதுக்கீடு அனைத்து வகையிலும் அபாயகரமாகக் குறைக்கப்பட்டது ஒரு முரண்நகை.

குழந்தை உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய ஆணையம் (NCPCR), பொதுக் கூட்டுறவு மற்றும் குழந்தை மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனம் (NIPCCP), (பெண்கள் மற்றும் குழந்தை நல அமைச்சகத்தின் கீழ் செயல்படும்) 'தத்தெடுப்பு ஆதார முறைப்படுத்தல் அதிகார மையம்' (CARA) போன்ற சட்டபூர்வ அமைப்புகளுக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்படாமல் தேக்கமடைந்து பற்றாக்குறை நிலை காட்சிகளே தொடர்கின்றன. சத்துப் பற்றாக்குறை, ரத்த சோகை, வயதுக்கேற்ற உடல் எடை, உயரமின்றி இருத்தல் போன்ற வளர்ச்சிக் குறைவால் இளம் பருவத்திலேயே இறக்க நேரிடுதல் எனப் பல்வேறு சவால்களை நாடு சந்திக்கும்போது, இப்பிரச்சனைகளைச் சமாளித்துக் கையாள நிதி ஒதுக்கீடு சிறிதேனும் அதிகரிக்கப்படும் என்ற எதிர்பார்ப்புக்கு மாறாக அவை, புறக்கணிக்கப்பட்டு கடுமையான பற்றாக்குறையில் கைவிடப்பட்டுள்ளன.

பெண்கள் – குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சரகம் அவர்களது நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறது. ஒரு குடையின் கீழ் என்னும் வகையில் (பெண்கள் நலன் மற்றும் பாதுகாப்புக்கான) 'பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்குக் கல்வி அளிப்போம்' உள்ளடக்கிய வாத்சல்யா, சம்பல், (பெண்கள் மீதான வன்முறை சார்ந்த) பல்வேறு பிரச்சனைகளுக்கு ஒரே தீர்வு இடம் (ஒன் ஸ்டாப் கிரைசிஸ் சென்டர்), சக்தி மிஷன் திட்டம், (பெண்களுக்கு அதிகாரமளித்தல் குறித்த) சமார்த்தியா (திட்டத்தின் கீழ் அடுக்களை புகையால் உடல்நல பாதிப்பிலிருந்து காக்க கேஸ் வழங்கும்) உஜ்வாலா யோஜனா, வேலைக்குச் செல்லும் பெண்களுக்கான விடுதிகள், மகப்பேறு சலுகை உரிமைகள், பாலினம் சார்ந்த பட்ஜெட் என எல்லாத் திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு ஒரு பெண் நிதியமைச்சர் தாக்கல் செய்த பட்ஜெட்டில் குறைக்கப்பட்டுள்ளன.

நாடு, விலைவாசி உயர்வு மற்றும் வேலையின்மை பிரச்சனையில் உழலும்போது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கான நிதியை ஒன்றிய அரசு கிரிமினலாகக் குறைத்துள்ளது. மகாத்மா காந்தி வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் பயன் அடைபவர்களில் பெரும்பான்மையோர் பெண் தொழிலாளர்களாக உள்ள நிலையில் அதற்கான நிதி ஒதுக்கீடு 60ஆயிரம் கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. அந்தத் தொகையில் ஊதிய நிலுவை பாக்கி 16ஆயிரம் கோடியைப் பட்டுவாடா செய்தபின் மீதம் இருக்கும் தொகை, கிராமப்புற இந்தியாவின் நிலைத்த வாழ்வாதாரத்திற்கு மிக மிகக் கடுமையான பற்றாக்குறையானதாகவே இருக்கும்.

அதுபோலவே சென்ற பட்ஜெட்டில் 2 லட்சத்து 80 ஆயிரம் கோடியாக இருந்த உணவு மானியம், இந்த ஆண்டு ஒரு லட்சத்து 97 ஆயிரம் கோடியாக வெட்டப்பட்டிருப்பது, நாட்டு மக்களின் உணவுப் பாதுகாப்பை நசுக்கும் பலமான தாக்குதலாகும்.

பெண்களுக்குப் பொருளாதார ரீதியில் அதிகாரமளித்தல் என்ற பெயரில் ஆயிரக் கணக்கான 'சுய உதவிக் குழு' அமைப்புகளைக் கூட்டுறவு அமைப்புகளாக மாற்றுவதைப் பட்ஜெட் முன்மொழிந்துள்ளது. ஆனால் அந்தச் சுய உதவிக் குழுக்கள் நீண்ட காலமாகக் கோரிவரும் 'வட்டி இல்லாத கடன்' வழங்குவதைப் பற்றி பட்ஜெட் வாய் திறக்கவில்லை.

பெண்கள் மற்றும் குழந்தைகள் சம்பந்தமான அனைத்து ஒதுக்கீடுகளையும் வெட்டிக் குறைத்த பிறகு, பட்ஜெட்டில் நிதி அமைச்சர் அறிவித்த 'பெண்கள் தன்மான சேமிப்புத் திட்டம்' (மகிளா சம்மான் பசட் பத்ர) அறிவிப்பு ஒரு கேலிக் கூத்து. இந்தச் சேமிப்புத் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட 7.5 சதவீத வட்டி விகிதம், எப்படியும் பணவீக்கத்தில் கரைந்து போகப் போகிறது.

மேலே விவரித்த அனைத்து அம்சங்களையும் கணக்கில் கொண்டு, இந்திய மாதர் தேசிய சம்மேளம், 2023–24ம் ஆண்டிற்கான ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையை நிராகரிக்கிறது. இந்திய மக்கள் தொகையில் செம்பாதிக்கும் அதிகமான பெண்களின்பால் பாஜக அரசின் இந்த அலட்சியமான புறக்கணிப்பை மாதர் சம்மேளனம் மிகக் கடுமையாகக் கண்டிக்கிறது".

செய்தி: நியூஏஜ்
தமிழில்: நீலகண்டன்

# சங்கே முழங்கு!



## மயிலாடுதுறை மாவட்டத்தில் தக்காளி காய்ச்சலா?



மயிலாடுதுறை மாவட்டத்தில் தக்காளி காய்ச்சல் எனப்படும், கை, பாதம், வாய் நோய் குழந்தைகளுக்கு தீவிரமாக பரவி வருகிறது. குறிப்பாக இந்த காய்ச்சல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குத்தான் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

கை, பாதம், வாய் நோய் என்பதைதான் கேரளாவில் தக்காளி காய்ச்சல் என அழைப்பதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த கை, பாதம், வாய் நோய் (HFMD) (HAND FOOTMOUTH DISEASE) குறிப்பாக காக்ஸ்சாக்கி வைரஸ் ஏ 16 என்ற வைரஸால் ஏற்படுகிறது. இது மிதமான பாதிப்பையே ஏற்படுத்தும்.

தொற்று பாதிக்கப்பட்ட முதல் வாரத்தில் நோய் அதிகமாக பரவக்கூடிய ஆபத்து உள்ளது. சுத்தமாகவும், சுகாதாரமாகவும் இருப்பதன் மூலம் இந்த நோயை தடுக்கலாம். குறிப்பாக குழந்தைகளின் டயப்பர்களை மாற்றியவுடன் கைகளை சுத்தமாக கழுவ வேண்டும்.

கழிவறைக்கு சென்ற பின் கைகளை சுத்தமாக கழுவ வேண்டும்.

குழந்தைகளுக்கு இந்த காய்ச்சலுக்கான அறிகுறிகள் தென்பட்டால் அவர்களை கூட்டமான இடங்களுக்கு செல்லாமல் தடுக்க வேண்டும், குழந்தைகள் விளையாடும் பொம்மைகளை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு தனிப்பட்ட சிகிச்சை எதுவும் இல்லை.

தோலில் சிவப்பு தடிப்புகள் தோன்றுவதால் இதற்கு தக்காளி காய்ச்சல் என்று பெயர் வைத்துள்ளனர். மற்றபடி தக்காளிக்கும் இதற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இந்த காய்ச்சலில் வரக்கூடிய கொப்புளங்கள் சிவப்பாக இருப்பதால் இதனை தக்காளி காய்ச்சல் என்கின்றனர். 1997 ஆம் ஆண்டுக்கு பிறகு என்டிரோ வைரஸ் 71 ஆல் உருவாகும் கை, பாதம், வாய் நோய் ஆசிய கண்டத்தில் பல்வேறு நாடுகளிலும், ஆஸ்திரேலியாவிலும் தாக்கியுள்ளது. 2018 ஆம் ஆண்டு மலேசியாவில் இந்த நோய் 76 ஆயிரம் குழந்தைகளை பாதித்தது. இந்தியாவிலும் இந்த நோய் அவ்வப்போது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், தற்போது இந்த காக்சாக்கி வைரஸான கை,பாதம், வாய் நேய் மயிலாடுதுறை மாவட்டத்தில் குழந்தைகளிடையே வேகமாக பரவ தொடங்கியுள்ளது. இது சின்ன அம்மை போன்று காணப்படுவதால் பலரும் சின்ன அம்மை என கூறி அதற்கான வழிமுறைகளை மேற்கொண்டுள்ளனர். குறிப்பாக 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை இந்த நோய் தாக்குவதால் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஒரு சில தனியார் பள்ளிகள் குழந்தைகளின் நலன் கருதி விடுமுறை அளித்துள்ளனர்.

கடந்த ஒரு மாத காலமாக ஆங்காங்கே தொற்று பரவியுள்ள நிலையில், பெரும்பாலும் பெற்றோர்கள் இது சின்னம்மை என்றே கருதி வீட்டிலேயே தனிமைப்படுத்தி வைக்கின்றனர். எனவே சுகாதாரத் துறையின் கவனத்திற்கு தொற்று குறித்த செய்தி சென்றதா என்று தெரியவில்லை. இது பற்றி எந்த அறிவிப்பும் சுகாதாரத் துறை அறிவிக்கவில்லை.

இந்த நோய் தாக்குதலால் பெரிய பாதிப்பு இல்லை என்ற போதிலும் இது ஒரு குழந்தை யிடம் இருந்து மற்றொரு குழந்தைக்கு எளிதில் பரவும் என்பதால் மாவட்ட சுகாதாரத்துறை இது குறித்து கூடுதல் கவனம் செலுத்தி, மாவட்டத்தில் செயல்படும் பிரைமரி மற்றும் நர்சரி பள்ளிகளுக்கு விடுமுறை அளித்து, இந்த நோய் மேலும் பரவாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் மற்றும் பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

– மா.பிரபாகரன்

# பாஜக பிடியிலிருந்து நாடு மீட்கப்பட வேண்டும்




**கோவையில் டி.ராஜா பேட்டி**

பாஜக பிடியிலிருந்து நாடு மீட்கப்பட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா கோவையில் செய்தியாளர் சந்திப்பின்போது தெரிவித்தார்.

கடந்த 12ஆம் தேதி கோவை ஜீவா இல்லத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் ஒன்றிய அரசின் பட்ஜெட் ஏமாற்றம் அளிக்கிறது. இந்த பட்ஜெட் ஏழை மக்களுக்கு எதிராக ஒரு தாக்குதல் கொடுத்திருக்கிறது.

அதானி மிகப் பெரும் அளவில் ஊழல் புரிந்திருக்கிறார். அது பகிரங்கமாக வெளிப்பட்டிருக்கிறது. இந்த ஊழலுக்கு யார் பொறுப்பு ஏற்பது பிரதமரா? நிதியமைச்சரா? என்ற கேள்வி எழுகிறது.

1958ல் முந்த்ரா ஊழல் நாட்டில் பிரச்சனையானது. அன்றைக்கு நேரு பிரதமராக இருந்தார். அந்த ஊழல் குறித்து நேருவின் மருமகனான பெரோஸ் காந்தி மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

ஊழலுக்கு பொறுப்பு ஏற்று அன்றைக்கு நிதி அமைச்சராக இருந்த டி.டி. கிருஷ்ணமாச்சாரி பதவி விலகினார்.

முந்த்ரா ஊழல் மிகச்சிறிய தொகை. ஆனால் இப்போது நடந்திருக்கும் ஊழல் என்பது மிகப்பெரிய அளவிலான ஊழல்.

மக்களின் பணத்தைக் கொண்டு செயல்பட்டு வரும் எல்.ஐ.சி., ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா ஆகியவற்றின் நிதியை பெற்று அதானி பெரிய அளவில் ஊழல் புரிந்திருக்கிறார்.

இதற்கு யார் பொறுப்பு ஏற்க இருக்கிறார்கள். நாடாளுமன்ற கூட்டுக்குழு அமைக்கப்பட்டு இது விசாரிக்கப்பட வேண்டும்.

இந்தியா கட்டிக் காத்து வரும் ஜனநாயகம், மதச்சார்பின்மை, பன்முகத்தன்மை ஆகியவை என்ன ஆகுமோ என்ற அச்சம் நாடு தழுவிய அளவில் எழுந்துள்ளது. அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகள் முற்றி வருகின்றன.

நம்முடைய அரசு மக்கள் நல அரசாக செயல்பட வேண்டும். கூட்டாட்சி நெறிமுறைகளை பின்பற்றுகிற அரசாக இருக்க வேண்டும். ஒன்றிய அரசு மாநில அரசுகளின் உரிமைகளை பறிக்கின்ற அரசாக இருக்கக் கூடாது. எனவே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மக்களிடமும், மதச்சார்பற்ற ஜனநாயக கட்சிகளிடமும் கோரிக்கை விடுக்கிறது.

வருகிற 2024 ஆம் ஆண்டு மிக முக்கியமான ஆண்டு. 2024ல் நடைபெறும் மக்களவை தேர்தலில் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். வீழ்த்தப்பட வேண்டும். ஒன்றியத்தில் பாரதிய ஜனதா அரசு அகற்றப்பட வேண்டும்.

பாரதிய ஜனதா பிடியிலிருந்து இந்திய நாட்டை மீட்டெடுக்க மதச்சார்பற்ற ஜனநாயக கட்சிகள் ஒன்றுபட்ட நிலையில் ஒற்றுமையோடு செயல்பட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது. இது மக்களின் உடனடி கடமையாக உள்ளது.

மாநிலக் கட்சிகள் முரண்பாடுகளைக் கடந்து ஒன்றுபட்டு செயல்பட்டு பாஜகவை முறியடிக்க வேண்டும்.

ஒரு நாடு ஒரு தேர்தல் என்று பாஜக பேசி வருகிறது. இந்திய நாட்டைப் பொறுத்தவரை இது நடைபெறாத ஒன்று. நாடு விடுதலைக்கு பின்னர் பல தேர்தல்களை சந்தித்துள்ளது. அந்த அனுபவம் நாட்டிற்கு உள்ளது. நிலைமைகள் தொடர்ந்து மாறி மாறி வந்துள்ளது. ஒரு நாடு ஒரு தேர்தல் என்பது இந்தியாவிற்கு பொருந்தாத ஒன்று.

கார்ப்பரேட் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் தேர்தல் நிதியில் பா.ஜ.க. மட்டுமே பலன் பெற்றுள்ளது. தேர்தல் சீர்திருத்தங்கள் அவசியம் தான். விகிதாச்சார முறையிலான தேர்தல் கொண்டுவரப்பட வேண்டும்.

ஆளுநர்கள் நியமனம் அரசியல் நியமனங்களாக மாறிப் போய் உள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சி மக்களிடம் செல்வாக்கு பெற்று வருகிறது. எனவே தான் மோடி கம்யூனிசம் காட்டுத் தீயாக வரும் என்று அச்சம் தெரிவித்திருக்கிறார். கம்யூனிச சித்தாந்தம் குறித்து மோடி தெரிந்து வைத்திருக்கிறார். கம்யூனிசம் என்பது ஒரு கொள்கை நிலை என்றும் டி.ராஜா தனது பேட்டி என்பது தெரிவித்தார்.

இந்த பேடியின் போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன், மாநில துணை செயலாளர் நா.பெரியசாமி, மாநில பொருளாளர் எம். ஆறுமுகம், மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் கே.எம்.செல்வராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.

### பேனா நினைவுச் சின்னத்தை சர்ச்சை ஆக்காதீர்

கடந்த 12 ம் தேதி கோவையில் நடைபெற்ற கட்சி நிகழ்ச்சி ஒன்றுக்கு வருகை தந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசனிடம் செய்தியாளர்கள், சென்னை மெரினா கடற்கரையில் கலைஞருக்கு பேனா நினைவு சின்னம் வைக்க இருப்பது குறித்து தாங்கள் கருத்து தெரிவிக்கவில்லை என்று கேள்வி எழுப்பினர்.

அந்தக் கேள்விக்கு பதில் அளித்த இரா. முத்தரசன், பட்டேலுக்கு ரூ.3,000 கோடி ரூபாயில் சிலை வைத்த போது யாரும் வாய் திறக்கவில்லை. ஆனால் கலைஞருக்கு 81 கோடி ரூபாயில் நினைவு சின்னம் வைக்கப்படுகிறபோது அதை சர்ச்சை ஆக்குகிறார்கள்.

பட்டேல் உயர் வகுப்பைச் சார்ந்தவர். ஆனால் கலைஞர் மிக மிக ஏழ்மை நிலையில் இருந்து வந்தவர். மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர் என்பதாலா? இந்த சர்ச்சை ஏற்படுத்துகிறது என்ற ஐயப்பாடு எழுகிறது. எனவே இதை சர்ச்சை ஆக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் கூறினார்.

# காதலர் தினம் மாடு அணைப்பு நாளா?

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்**

இந்திய விலங்குகள் நல வாரியம் வரும் 14 ஆம் தேதியை மாடு அணைப்பு நாளாக (Cow hug day) கடைப்பிடிக்குமாறு அறி வித்திருப்பது அறிவார்ந்த செயல் அல்ல. அது ஒன்றிய அரசின் கால்நடைத் துறை அமைச்சகத்தின் ஒப்புதலுடன் வெளியாகி யிருப்பது வெட்கக்கேடானது.

மனிதர்கள் ஒருவர் மீது ஒருவர் காட்டும் அன்பை கொண்டாடும் தினமாக, ஆண்டுதோறும் பிப்ரவரி 14 ஆம் தேதி உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

மனிதர்கள் பாகுபாடு இல்லாமல், வேறுபாடு காட்டாமல் சகவாழ்வு மேற்கொள்வதை வலுப்படுத்தும் நிகழ்வாகவே "காதலர் தினம்" கருதப்படுகிறது.

சாதிய அடுக்குமுறை சமூகத்தை திருத்தி, மாற்றியமைக்க சாதி, மத மறுப்பு திருமணங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என அறிஞர்கள் பலர் வலியுறுத்தியுள்ளனர். "ஆதலினால் காதல் செய்வீர், ஜெகத்தீரே" என மகாகவி பாரதியார் அழைப்பு விடுத்தார். மூடப் பழக்க வழக்கங்களில் மூழ்கி கிடக்கும் மனித சமூகத்தை, அறிவியல் பாதைக்கு உயர்த்திச் செல்லும் பகுத்தறிவை ஊக்கப்படுத்த வேண்டும் என அரசியல் அமைப்புச் சட்டம் வலியுறுத்துகிறது.

இவைகளுக்கு எதிராக காதலர் தினத்தை இழிவு செய்யும் வகையில், இந்திய விலங்குகள் நல வாரியம் "மாடு அணைப்பு நாளாக" கடைப்பிடிக்குமாறு அறிவித்திருப்பதையும், அறிவுக்கு பொருந்தாத இந்த அறிவிப்புக்கு ஒப்புதல் அளித்த ஒன்றிய அரசின் கால்நடைத்துறை அமைச்சகத்தையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது. இந்திய விலங்குகள் நல வாரியம் தனது அறிவிப்பை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்றும், இதற்கு ஒப்புதல் அளித்த அதிகாரிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## முக்கிய அறிவிப்பு

ஜனசக்திக்கு கட்டுரை எழுதுவோர் படம் உள்ளிட்டு முக்கால் பக்கத்திற்குள் எழுத வேண்டுகிறோம், டைப்பிங் செய்து word fileலில் unicode fontல் அனுப்பவும்.

வாட்ஸ் அப்பில் செய்திகள், படங்கள் அனுப்பக் கூடாது. புகைப்படங்கள் தெளிவாக இருக்க வேண்டும். ஜனசக்தி இ.மெயிலில் மட்டும் அனுப்ப வேண்டும். நோட்டீஸ், மனுக்களை அப்படியே அனுப்பக் கூடாது. சுருக்கி செய்தியாக்கி அனுப்ப வேண்டும்.

ஜனசக்தி உள்ளடக்கம் சம்பந்தமாகத் தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி:

**டி.எம்.மூர்த்தி - 9444360869,**
**த.லெனின் - 94444 81703**

இயக்கச் செய்திகள் சம்பந்தமாகத் தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி:

**ஜெ.முருகேசன் - 78456 93142**

ஜனசக்தி விநியோகம் சம்பந்தமாக தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி:

**கே.கணேசன் - 9444331138**

ஜனசக்தி வரவு கணக்குச் சம்பந்தமாகத் தொடர்பு கொள்ள வேண்டிய கைபேசி:

**இளசை கணேசன்**
**8220468816**

ஆசிரியர் குழு,
ஜனசக்தி

# ஏஐடியூசி ஆட்டோ ஓட்டுனர் சங்கத்தின் கிளை துவக்க விழா



செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட தைலாவரம் வல்லாஞ்சேரி ஏஐடியூசி ஆட்டோ ஓட்டுனர் சங்கத்தின் கிளை துவக்க விழா தலைவர் ஆர்.ஏழுமலை தலைமையில் நடைபெற்றது. இதில் கிளை நிர்வாகிகள் ஆர்.ராமு, எஸ். சுந்தர், எஸ்.அன்பு முன்னிலை வகித்தனர். கொடியை மாவட்ட செயலாளர் க. ஜெகதீசன் ஏற்றி வைத்தார். பெயர் பலகையை மாவட்ட துணை செயலாளர் இரா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் கௌரவ தலைவர் ஆர்.தேவராஜன், தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் ஒய்.ஹாருன் பாஷா உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். கிளை பொருளாளர் எம்.தட்சிணாமூர்த்தி நன்றி கூறினார்.

# சாத்தூர் வட்ட மாதர் சங்க பேரவைக் கூட்டம்



சாத்தூர் தேவர் திருமண மண்டபத்தில் இந்திய மாதர் தேசிய சம்மேளன வட்டப் பேரவைக்கூட்டம் நடைபெற்றது. பத்மாவதி தலைமை வகித்தார். ராதிகா முன்னிலை வகித்தார். மாதர் சங்க மாவட்ட செயலாளர் பாண்டிசெல்வி மாநிலக்குழு முடிவுகளை விளக்கிப் பேசினார். சிபிஐ மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, தகஇபெ மாநில பொதுச்செயலாளர் மருத்துவர் த.அறம், வட்ட செயலாளர் சுவாமிநாதன் , நகர செயலாளர் ஜான்ராஜா ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். சட்டமன்ற, நாடாளுமன்றங்களில் 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்க வேண்டும், திருமண வயதை 18லிருந்து 22ஆக உயர்த்துவதை ஒன்றிய அரசே கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தலைவராக மீனாட்சி, துணை தலைவராக குருமாரீஸ்வரி, செயலாளராக மணிமேகலை, துணை செயலாளராக கவிதா, பொருளாளராக காளீஸ்வரி ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

# ஒன்றிய நிதிநிலை அறிக்கையைக் கண்டித்து கருத்தரங்கம்

விவசாயிகள் விராத, மக்கள் விரோத, தொழிலாளர் விரோத நிதிநிலை அறிக்கையைக் கண்டித்து தஞ்சாவூர் பெசன்ட் அருகில் ஐக்கிய விவசாயிகள் முன்னணி சார்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. சமவெளி விவசாயிகள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பொறியாளர் சு.பழனிராஜன் தலைமை வகித்தார். விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் வீர மோகன், மாவட்ட செயலாளர் பி.செந்தில் குமார் உள்ளிட்டார் முன்னிலை வகித்தனர். கருத்தரங்கில் கோரிக்கைகளை விளக்கி ஐக்கிய விவசாய முன்னணியின் மாநில ஒருங்கிணைப்பாளர் கே.பாலகிருஷ்ணன், மக்கள் அதிகாரத்தின் மாநில பொருளாளர் காளியப்பன், தாளாண்மை உழவர் இயக்கத்தின் நிறுவனர் பொறியாளர் கோ.திருநாவுக்கரசு, சிபி எம்எல் மக்கள் விடுதலை மாவட்ட செயலாளர் இரா.அருணாசலம் உள்ளிட்டோர் உரையாற்றினர். இடதுசாரிகள் பொது மேடை ஒருங்கிணைப்பாளர் துரை.மதிவாணன் நன்றி கூறினார்.

# சேலம் சிறை தியாகி காவேரி நினைவு நாள் கூட்டம்

சேலம் சிறை தியாகிகள் நினைவை போற்றும் வகையில் திருச்செங்கோடு, சூரியம்பாளையம் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் சேலம் சிறை தியாகி காவேரி நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது.

சிபிஐ திருச்செங்கோடு நகர குழு உறுப்பினர் எம்.முனுசாமி தலைமை தாங்கினார். காவேரி முதலியார் பேரன் கனகராஜ், கந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தார்.

சிபிஐ மாவட்ட செயலாளர் கே.அன்புமணி, சிபிஐ திருச்செங்கோடு நகர செயலாளர் எஸ்.சுகுமார், ஏஐடியுசி மாவட்ட தலைவர் எஸ்.ஜெயராமன், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன், சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர் டி.கே.சுப்பிரமணி, சிபிஐ நகர துணை செயலாளர்கள் பி.கார்த்திக், எஸ்.தண்டபாணி, வி.ச. மாவட்ட செயலாளர் என்.செல்வராஜ், சி.முருகேசன் எக்ஸ்.எம்.சி., சூரியம்பாளையம் மண்ணாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சூரியம்பாளையம் மணி நன்றி கூறினார்.

# ஒன்றிய அரசின் பட்ஜெட்டை கண்டித்து ஏஐடியூசி ஆர்ப்பாட்டம்




ஒன்றிய பா.ஜ.க. அரசு தாக்கல் செய்த பட்ஜெட் மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு விரோதமாகவும், வேலையின்மையை அதிகரிப்பதாகவும், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த தவறியதாகவும் உள்ளது. இதைக் கண்டித்து அகில இந்திய அளவில் ஏஐடியூசி தொழிற்சங்கம் அறைகூவலின்படி தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

**திருச்சி:** திருச்சி மாநகரில் மாவட்ட தலைவர் வே. நடராஜா தலைமையில் உறையூர் குறத்தெருவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட பொதுச் செயலாளர் க. சுரேஷ், அகில இந்திய வங்கி யூனியன் பொதுச் செயலாளர் ராமராஜ், சிபிஐ மாநகர் மாவட்ட செயலாளர் சிவா மற்றும் கட்டுமானம் முருகன், நிர்மலா, தரைக் கடை அன்சர்தீன், சையது அபுதாகீர் மேற்கு பகுதி சந்திர பிரகாஷ் உள்ளிட்டோர் உரையாற்றினர். சுமதி நன்றியுரை கூறினார்.

**புளியங்குடி:** தென்காசி மாவட்டம் புளியங்குடியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட ஏஐடியூசி பொதுச் செயலாளர் டி.சுப்பையா தலைமை தாங்கினார்.

சிபிஐ மாவட்ட செயலாளர் டி. இசக்கித்துரை, மாவட்ட விசைத்தறி சங்க செயலாளர் பி.வேலு, நகர்மன்ற உறுப்பினர் எஸ்.பாக்கியம், மாவட்ட ஆட்டோ தொழிற்சங்க செயலாளர் எம்.முனியாண்டி, விதொசா மாவட்ட பொருளாளர் பி.முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர் !

**மணப்பாறை:** மணப்பாறை பேருந்து நிலையம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஏ ஐ டி யூ சி உள்ளாட்சித் தொழிலாளர் சங்க மாவட்டத் தலைவர் த.இந்திரஜித் தலைமை வகித்தார். ஏ ஐ டி யூ சி மாவட்ட துணைத்தலைவர் ஜனசக்தி உசேன் முன்னிலை வகித்தார். ஏஐடியூசி மாநிலக் குழு உறுப்பினர் சுப்ரமணியன், சிபிஐ திருச்சி புறநகர் மாவட்ட துணை செயலாளர் பழனிச்சாமி, அமைப்பு சாரா தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் நல்லுச்சாமி, போக்குவரத்து கழக மாநில குழு உறுப்பினர் ஆறுமுகம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**திருவண்ணாமலை:** திருவண்ணாமலை நகரில் வே. முத்தையன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இளைஞர் பெருமன்ற திருமலைராமன், த. ராசேந்திரன், எம் எஸ். மாதேஸ்வரன் மற்றும் பல தோழர்கள் பங்கேற்றனர்.

**தஞ்சை:** தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் அரசு விரைவு போக்குவரத்து கழகம் முன்பு நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாநில செயலாளர் ஆர்.தில்லைவனம் தலைமை வகித்தார். தேசிய நிர்வாக குழு உறுப்பினர் சி. சந்திரகுமார் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில் வங்கி ஊழியர் சங்கத்தின் மாவட்ட பொதுச் செயலாளர் க.அன்பழகன்,. ஏஐடியூசி தஞ்சை மாவட்ட தலைவர் வெ.சேவையா, மாவட்ட பொருளாளர் தி.கோவிந்தராஜன், மின்வாரிய சம்மேளன துணைத் தலைவர் பொன். தங்கவேல், கும்பகோணம் அரசு போக்குவரத்து சங்க பொதுச் செயலாளர் எஸ்.தாமரைச்செல்வன், ஓய்வு பெற்றோர் சங்க பொதுச் செயலாளர் பி.அப்பாத்துரை, சுமை சங்க மாநிலத் தலைவர் அ.சாமிக்கண்ணு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




**கள்ளக்குறிச்சி:** கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் ஆ.வளர்மதி தலைமை தாங்கினார். மாநிலக்குழு உறுப்பினர் ஆண்டாள், வங்கி ஊழியர் சங்கம் தலைவர் கல்யாணசுந்தரம் முன்னிலை வகித்தனர். விவசாய தொழிலாளர் சங்க மாநில நிர்வாகக்குழு உறுப்பினர். கே.எஸ். அப்பாவு கண்டன உரையாற்றினார். காமராஜ், கட்டட தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் ஆ. அருண். மாவட்ட துணை செயலாளர் ராஜி. மாவட்ட பொருளாளர் தாமோதரன் மற்றும் தோழர்கள் பங்கேற்றனர்.

**திருவண்ணாமலை:** ஒன்றிய அரசின் பட்ஜெட்டை கண்டித்து செங்கம் வட்டம் புதுப்பாளையம் அம்பேத்கர் சிலை அருகில் ஏஐடியுசி சார்பில் எம்.எஸ். மாதேஸ்வரன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆரணி வட்டம் மெய்யூரில் ஏஐடியுசி கைத்தறி தொழிலாளர் சங்க கூட்டம் நரசிம்மன் தலைமையில் நடைபெற்றது. ஒன்றிய அரசின் பட்ஜெட்டை கண்டித்து மாவட்ட பொதுச்செயலாளர் எம் எஸ் மாதேஸ்வரன், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் ஜி. குறள் முரசு, மாதர் சம்மேளனம் கலைவாணி மற்றும் பல தோழர்கள் பங்கேற்றனர்.

திருவண்ணாமலைமாவட்டம்ஆரணிஅண்ணாசிலை அருகில் ஒன்றிய அரசின் பட்ஜெட்டை கண்டித்து ஏஐடியுசி மாவட்டத் துணைத் தலைவர் வி.குப்புரங்கன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஏஐடியுசி மாவட்ட பொதுச்செயலாளர் எம்.எஸ்.மாதேஸ்வரன், தாஸ், வாசுதேவன் ஆகியோர் பேசினர். ஏஐடியுசி மாவட்ட பொருளாளர் டி. வெங்கடேசன் நன்றி கூறினார்.

**சென்னை:** சென்னை பிராட்வே ஆசிர்வாதபுரத்தில் ஏஐடியூசி சங்கங்களின் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வடசென்னை மாவட்டத் தலைவர் எம்.எஸ்.மூர்த்தி, தென் சென்னை மாவட்டப் பொதுச் செயலாளர் ஆர்.அழகேசன், மத்திய சென்னை மாவட்டத் தலைவர் எஸ்.எஸ்.சரவணன் ஆகியோர் தலைமை தாங்கினர். ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து ஏஐடியூசி மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் ஆர்.துரைசாமி பேசினார். வடசென்னை மாவட்ட கௌரவத் தலைவர் எஸ்.குப்பன், பொதுச் செயலாளர் ஏ.அருள், ஆட்டோ சம்மேளன பொதுச் செயலாளர் ப.மாரியப்பன், நிர்வாகிகள் மு.வரதன், சாமிநாதன், சக்திவேல், பாஸ்கர் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.



# மேலூர் அரசுக் கல்லூரியில் அடிப்படை வசதிகள் கேட்டு மாணவர்கள் முற்றுகை

மதுரை மேலூர் அரசு கலைக் கல்லூரியில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதியை சீரமைத்து தரக்கோரியும் கல்லூரி மாணவர்களுக்கு குடி தண்ணீர் மற்றும் உணவு தரமான வகையில் வழங்கிட வலியுறுத்தி அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாவட்டத் தலைவர் எம்.ஜெகநாதன் தலைமையில் கல்லூரி முதல்வர் அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம் நடைபெற்றது. இதில் மாநில குழு உறுப்பினர் க.சேதுபாண்டி, கல்லூரி கிளை தலைவர் சரவணன் மற்றும் ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# ம.சிங்காரவேலர் 78வது நினைவு தினம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவனத் தலைவர்களில் ஒருவரும், தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் என்று போற்றப்படுபவருமான தோழர் ம.சிங்காரவேலர் நினைவு தினம் பிப்.1 அன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில தலைமை அலுவலகமான சென்னை பாலன் இல்லத்தில் அனுசரிக்கப்பட்டது.

இதில் கே.சுப்பராயன் எம்.பி., ஏஐடியூசியின் தேசிய செயலாளர் டி.எம்.மூர்த்தி ஆகியோர் உரையாற்றினர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம், ஏஐடியூசியின் மாநில பொதுச் செயலாளர் ம.இராதாகிருஷ்ணன், மாநிலத் தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன், ஏஐடியூசி செயற்குழு உறுப்பினரான என்.சேகர், எஸ்.சின்னசாமி, சி.சந்திரக்குமார் மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் தென் சென்னை எஸ்.கே. சிவா, மத்திய சென்னை ப.கருணாநிதி உள்ளிட்ட திரளான தோழர்கள் பங்கேற்று மா.சிங்காரவேலருக்கு அஞ்சலி செலுத்தினர்.

**வடசென்னை:** சிங்காரவேலர் 78வது நினைவு தினத்தை முன்னிட்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்டம் முழுவதும் கிளைகள் தோறும் படங்களை வைத்து செவ்வஞ்சலி செலுத்தும் நிகழ்வு மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள அவருடைய முழு திருவுருவ சிலைக்கு சிபிஐ மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அவருடன் சிபிஐ முன்னாள் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி, சிபிஐ வடசென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, சிபிஐ மாவட்ட துணைச் செயலாளர்கள் ஜி.சுப்ரமணி, எம்.ஜெய்சங்கர், மத்திய சென்னை மாவட்ட பொருளாளர் மு.வரதன், 42வது வட்ட மாமன்ற உறுப்பினர் மோ.ரேணுகா, நிர்வாகக்குழு உறுப்பினர்கள் அ.சுப்பிரமணி, ஆர்.கோட்டிசுரேஷ், பி.கருணாகரன், மாவட்ட குழு தோழர்கள் உள்ளிட்டு திரளாக தோழர்கள் பங்கேற்றனர்.

**தஞ்சை:** இடதுசாரிகள் பொதுமேடை




சார்பில் ம.சிங்காரவேலர் நினைவேந்தல் நிகழ்ச்சி தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம், காவேரி சிறப்பங்காடி அருகில் நடைபெற்றது. நிகழ்விற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் வெ.சேவையா தலைமை வகித்தார். மக்கள் அதிகாரம் மாநில பொருளாளர் காளியப்பன், இடதுசாரிகள் பொதுமேடை ஒருங்கிணைப்பாளர் துரை.மதிவாணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**திருச்சி மாநகர்:** சிந்தனை சிற்பி ம.சிங்காரவேலர் 77வது நினைவு தினம் திருச்சி மாநகர் மேற்கு பகுதி 11 வது வார்டு கிளையில் செயலாளர் ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது. கட்சியின் கொடியினை மாமன்ற உறுப்பினர் க. சுரேஷ் ஏற்றி வைத்தார். மாநகர் மாவட்ட செயலாளர் சிவா உள்ளிட்ட நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தி உரையாற்றினார்.

**மதுரை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மதுரை புறநகர் மாவட்டம், மேற்கு ஒன்றியம் சார்பில் 'சிந்தனை சிற்பி' சிங்காரவேலர் 77 வது நினைவு தினம் மேற்கு ஒன்றிய செயலாளர் கண்ணன் தலைமையில் பவர்ஹவுஸில் அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்வில் சி.பி.ஐ. மாநிலக் குழு உறுப்பினர் நாகஜோதி, பெத்தனன் ஆகியோர் முன்னிலையில், கிருஷ்ணன், கண்ணன், பாலு, ஆட்டோ தொழிலாளர்கள் இரஞ்சித், முனியசாமி மற்றும் கதிரவன் உள்ளிட்ட பலர் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

**நாகை:** நாகப்பட்டினம் மாவட்ட அலுவலகத்தில் சிங்காரவேலர் நினைவகத்தில் நாகை ஒன்றியக் குழுவின் சார்பில் ம.வெ. சிங்காரவேலர் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.


வி.தொ.ச. மாவட்டத் தலைவர் வி.இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற விழாவில் மாநிலக் கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் கோ.பாண்டியன் மலர் மாலை அணிவித்துப் புகழஞ் சலி செலுத்தினார்.

முன்னாள் நகரச் செயலாளர் கே.என்.சுந்தரம், ஒன்றியத் துணைச் செயலாளர் கே.இ.இலரா, மாதர் சம்மேளன ஒன்றியச் செயலாளர் இ.சுமதி, வி.ஆர்.முரளி, கே.கோமதி மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

# இன்றும் பொருந்தும் கம்யூனிஸ்ட் அறிக்கை

**பொருளாதார வல்லுனர் ஜெயதி கோஷ்**

'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை' வெளியான 175ஆம் ஆண்டு இது. நீங்கள் முதன்முறையாக அதை வாசித்த அனுபவத்தை நிளைவுகூர முடியுமா? செயற்கை நுண்ணறி வின் (கிமி) அசாதாரணமான எழுச்சியும் வேலைவாய்ப்பு உள்ளிட்ட பலவற்றில் அது தாக்கமும் செலுத்திவரும் தற்போதைய காலகட்டத்தில், அந்த 'அறிக்கை'யின் பொருத்தப்பாடு என்ன?"




நான் மிக இளவயதில் 'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை முதன்முறையாக வாசித்தேன்: மாணவப் பருவத்தின் அந்தக் காலகட்டத்தில் நாங்கள் மிகுந்த தீவிரத்துடன் இருந்தோம்; இதோ புரட்சி வந்துவிட்டது, அது மாற்றத்தைக் கொண்டுவந்துவிடும் என எல்லாரும் நம்பினோம். எனவே அது மிகவும் ஊக்கமளிக்கும் ஆவணமாக இருந்தது. குறிப்பாக, தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் தொழிலாளர்கள் ஒன்றுகூடுவதற்கான சாத்தியத்தை அது. அங்கீகரித்தது உண்மையில் பெரிய விஷயமாகத் தோன்றியது. அந்த அடிப்படைப் பொதுநலன் இப்போதும் நிலவவே செய்கிறது. வேலைக்குச் செல்பவர்கள், வேலை செய்பவர்கள் என அங்கீகரிக்கப்பட்டவர்கள் மட்டுமல்லாமல், வேலை செய்யும் அனைவரும் முறையாக அங்கீகரிக்கப்படாத, முறையான ஊதியம் பெறாத அனைவருமே தொழிலாளர்கள்தான் என்பதை வளர்ந்த பிறகே நான் உணர்ந்தேன்.


மிகச் சமீபத்தில் 'அறிக்கையை மீண்டும் வாசித்தபோது, திகைத்துப் போனேன். முழுமையாக இல்லையென்றாலும், உற்பத்திச் செயல்பாட்டில் செயற்கை நுண்ணறிவு ஏற்படுத்தியிருக்கும் விளைவுகள் சார்ந்து கூர்மையாகப் பல இடங்களில் அதுகூறியிருப்பது இன்றைக்கும் பொருந்துகிறது. மார்க்ஸ் எங்கெல்ஸ் காலத்தில் உருவாகியிருக்காத உலகமயமாக்கலின் பிரச்சினைகளைப் பற்றி 'அறிக்கை' பேசுகிறது. ஒரு பண்பாட்டுக் கூறு இன்றைக்கு உலகம் முழுவதும் சென்றுவிடுகிறது. ஃபிரெண்ட்ஸ்' என்கிற அமெரிக்கத் தொலைக்காட்சித் தொடரை இணையத்தில் பார்த்து சீன மாணவர்கள் ஆங்கிலம் சுற்றுக்கொள்கிறார்கள்; இந்தியர்களோ கொரியப் பாடல்களைக் கொண்டாடித் திளைக்கிறார்கள். எல்லாமே சர்வதேசமயமாகிவிடுகிறது. ஒரு பண்பாடு, உலகம் முழுவதும் செல்வதற்கான சாத்தியங்களைக் கொண்டிருப்பதையும், நாம் என்ன உருவாக்குகிறோம், எப்படி உருவாக்குகிறோம் என்பதை அது தீர்மானிப்பதையும் அந்த அறிக்கை எப்படிக் கற்பனை செய்துபார்த்தது என்று எனக்குத் தெரியவில்லை, ஆகவே, அது இன்றைக்கும் பொருத்தப்பாடு உடையதாகிறது என்பதே இதிலிருந்து கிடைக்கும் செய்தி.

**நன்றி: இந்து தமிழ் திசை 14.02.2023**

# த.ஒ.வா.இ. கிருஷ்ணகிரி மாவட்ட மாநாடு

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க கிருஷ்ணகிரி மாவட்ட மாநாடு நடைபெற்றது. இதில் பொதுச்செயலாளர் மு.வீரபாண்டியன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் எம்.லகுமையா கலந்து கொண்டனர்.

மாநாட்டில் ஒசூர் மஞ்சுநாதன் மாவட்டத் தலைவராகவும், கே.அப்புனு மாவட்டச்செயலாளராகவும், முனிராஜ் மாவட்டப் பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.



புதிதாக பொறுப்பேற்றுள்ள

## விருதுநகர் மாவட்ட ஆட்சியருடன் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் சந்திப்பு



விருதுநகர் மாவட்டத்திற்கு புதிதாக மாவட்ட ஆட்சித்தலைவராக ஜெயசீலன் பொறுப்பேற்றுள்ளார். அவரை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், திருச்சுழி ஒன்றிய செயலாளர் செல்வம், இளைஞர் பெருமன்ற பகத்சிங் ஆகியோர் சந்தித்தனர். அப்பொழுது ஜார்ஜ் பொலிட்ஸர் எழுதிய "மார்க்சீய மெய்ஞானம்" நூலை வழங்கினர்கள். மாவட்ட மக்கள் பிரச்சினைகளை ஆட்சியரிடம் எடுத்துக் கூறினார்கள்.

நாய் இறந்து கிடந்த

## மேல்நிலை குடிநீர்த் தொட்டியை சிபிஐ தலைவர்கள் பார்வையிட்டனர்

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே புதுக்கோட்டை கிரமம் உள்ளது. இங்குள்ள மேல்நிலை குடிநீர் தொட்டியில் ஒரு நாய் இறந்து கிடந்தது . போலீசார் விசாரித்து ஒருவரை கைது செய்துள்ளனர் . தகவலறிந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணை செயலாளர் சமுத்திரம், வட்ட செயலாளர் ஜீவா ஆகியோர் நேரில் சென்று மக்களை சந்தித்தனர். மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்க சம்பந்தப்பட்ட அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி னார்கள். சம்பந்தப்பட்ட குற்றவாளி மீது கடுமையான நடவடிக்கைகளை ஏடுக்கவும் வலியுறுத்தினர்

## ஒன்றிய பட்ஜெட் எதிர்ப்பு வார இயக்கம்




செங்கல்பட்டு மாவட்ட ஏஐடியுசி ஒன்றிய அரசின் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, பட்ஜெட்டை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் கூடுவாஞ்சேரி பேருந்து நிலையம் முன்பு மாவட்ட உள்ளாட்சி சுகாதார பணியாளர் சங்க தலைவர் ஆர்.தேவராசன் தலைமையில் மாவட்ட ஏஐடியுசி பொதுச்செயலாளர் எம்.ஜஹாங்கீர் துவக்கி வைக்க பட்ஜெட் எதிர்ப்பு கோஷங்கள் முழங்க நடைபெற்றது.

மின்சார ஊழியர் சம்மேளன மாநில பொருளாளர் என்.அருள்தாஸ், மாவட்ட பரப்புரை செயலாளர் க.ஜெகதீசன், ஆட்டோ சங்க மாவட்ட துணை செயலாளர் ஆர்.சுப்பிரமணி, மாவட்ட டாஸ்மாக் சங்கத் தலைவர் என்.எம்.ஆனந்தன், மாவட்ட உள்ளாட்சி சங்க செயலாளர் ஏ.வரதன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். மாநில செயலாளர் வி.ஆதிமூலம் நிறைவுரையாற்றி முடித்து வைத்தார்.

## இந்த வார தம்பிக்குறள்

### 107. ஏட்டறிவு ஏற்றல் எளிது

**ஏட்டறிவு ஏற்றல் எளிதாகும் எஞ்ஞான்றும்
நாட்டறிவு நாடல் நலம்.**


நூல்களைப் படித்து அறிவு பெறுவது எளிதான செயல்! ஆனால் (அத்துடன்) நாட்டு மக்களிடம் நாம் கற்கும் பட்டறிவுதான் சிறப்பினைச் சேர்க்கும் (ஏட்டறிவுடன் நாட்டறிவினை இணைக்க)

**ஏட்டறி வாகும் மருந்துபிற நாட்டறிவு
நல்ல உணவாகும் நம்பு.**

ஏட்டில் படிக்கும் படிப்பு அறியாமை நோய் நீங்க அளிக்கும் நல்ல மருந்தாகப் பயன்படும். ஆனால் நாட்டு மக்களிடம் பெறும் அறிவே உணவு போன்றதாகும். (உணவு மருந்தும் ஆகலாம். மருந்தே உணவாகி விடாது.)

## நூல் நயம்

### கேரளத்தில் கண்ணகி வழிபாடும் - கொடுங்கல்லூர் கோவிலும்




கேரளத்தில் கண்ணகி வழிபாடு திருவனந்தபுரம் முதல் காசர்கோடு வரை உள்ள இடங்களில் வழக்கில் உள்ளது என்றாலும், வட கேரளத்தில் குறிப்பாக பாலக்காடு மாவட்டத்தில் பரவலாக உள்ளது. கண்ணகி வழிபாடு கேரளத்தில் மூன்று நிலைகளில் வழக்கில் உள்ளது. தனி பகவதி வழிபாடு. இவள் வைதீக மரபுடன் தொடர்புடையவர் எனப்படுதல், பகவதி என்னும் பெயரைப் பெற்று வழிபாடு பெற்றாலும், கண்ணகியின் அடையாளங்களுடன் கூறப்படுதல் இத்தகு தெய்வங்கள் வைதீக சார்பு, நாட்டார் சார்பு ஆகிய இருநிலைகள் உள்ளன. கண்ணகி ஸ்ரீ குறும்பா தேவி என்னும் பெயருடன் தனி வழிபாடு பெறுதல் இதில் நாட்டார் மரபுடன் வைதீக மரபும் பின்னர் கலக்கிறது.

கேரள பகவதி, கண்ணகி பழந்தமிழரின் கொற்றவை, ஜைனரின் பத்மாவதி தேவி, பௌத்தரின் தாராதேவி, வைதிகரின் துர்கா தேவி என எல்லாம் கலந்தவள். ஆரம்பகால சேர நாட்டில் வழிபாடு பெற்றிருந்த கொற்றவையுடன் கண்ணகி வழிபாடு இணைந்த காலகட்டத்தில் வைதீகமும் இணைந்து இருக்கலாம். கேரளத்தில் பெண் தெய்வ வழிபாட்டின் தாக்கம் அதிகம் உள்ளது. அங்கு அவள் பகவதி என அறியப்படும் காளியும் பகவதியே.

கேரள மாநிலத்தின் மேற்கே நீண்டு கிடக்கும் அரபிக்கடல் சகல மதங்களும் இங்கே வருகை தர இடம் அளித்தது. கிறிஸ்தவம், யூதம், இஸ்லாம் ஆகிய மதங்கள் ஆரம்ப காலத்தில் வந்துவிட்டன. இந்த மதங்கள் வருவதற்கு முன்பே நாட்டார் சமயத்துடன் ஜயினமும், பௌத்தமும், வைதீகமும் பரவி இருந்தன. கேரள வைதிக தத்துவார்த்த மரபில் பௌத்தம் வேரூன்றி உள்ளது என்பர். சபரிமலை சாஸ்தாவை புத்தரின் அவதாரம் எனக் கருதுகின்றனர். இவ் வழிபாட்டின் சரண கோஷம் பௌத்தத்தின் பிரதிபலிப்பு என்பர். கேரளத்தின் நாகர் வழிபாடு பௌத்தம் வழி வந்தது என்ற கருத்தும் உண்டு.

கேரள பொதுவுடைமைவாதிகளும் வைதீக மரபுகளை மறுதலிக்கவில்லை, சபரிமலை வழிபாடு கேரளத்தின் பொது வழிபாடு. ஆரம்ப கால கேரளத்தின் திராவிட வழிபாட்டுக் கூறுகளை அயலக மதங்களும், அவைதிக வைதிக மதங்களும் பாதித்தாலும் இன்றும் அவற்றின் திராவிட கூறுகள் மங்கவில்லை. பண்டைத் தமிழகத்தின் வழிபாட்டு கூறுகளை தமிழகத்தில் தேடுவதை விட கேரளத்தில் தேடுவதற்கு சாத்தியக்கூறுகள் அதிகம். வடகேரளத்தில் கி.பி. எட்டாம் நூற்றாண்டை ஒட்டி நம்பூதிரிகளின் செல்வாக்கு ஆரம்பமானது. வைதீக வளர்ச்சி இதிலிருந்து தொடங்குகிறது என்பர். இதனால் ஜெயின், பௌத்தம் குன்ற ஆரம்பித்தன. இக்கால சமய மறுமலர்ச்சிக்கு முக்கிய காரணமானவர்கள் ஆதிசங்கரர், குலசேகர ஆழ்வார், சேரமான் பெருமாள் நாயனார் போன்றோர். இதன் மூலம் வைதிக மரபு ஆதிக்கம் செலுத்த தொடங்கியது.

கேரளத்தில் பெண் தெய்வ வழிபாட்டின் தாக்கம் அதிகம் உள்ளது. அங்கு அவள் பகவதி என அறியப்படுகிறாள். காளியும் பகவதியே என நூலாசிரியர் அ.கா. பெருமாள் இந்நூலில் நிறுவி இருக்கிறார். இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்கவும்.

**– இன்சுவை பாரதி**

| | | |
|---|---|---|
| **நூலாசிரியர்** | : | **அ.கா.பெருமாள்** |
| **பக்கம்** | : | 214 விலை : 270 |
| **வெளியீடு** | : | **நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 50** |

### ஜீவா (கவிதையில் வாழ்வியல் வரலாறு)




இந்திய விடுதலைப் போராட்ட வீரர். பொதுவுடமை இயக்கத்தின் தத்துவ ஆசான். இலக்கிய பேராசான் ஜீவாவின் வாழ்க்கை வரலாற்றை, இன்றைய இளைய தலைமுறை எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் எளிய நடையில் இந்த கவிதை நூலை கவிஞர் த. இந்திரஜித் எழுதியுள்ளார்.

'குறிஞ்சியும், முல்லையும், மருதமும் கூடி குலாவும் நாஞ்சில் நாட்டில், எப்போதும் இயற்கை அன்னை தாராளம் காட்டும் தங்க பூமியாம் பூதபாண்டி என்ற சிற்றூரில் நம்முடைய நாயகர் ஜீவா அவதரித்தார். அந்த அழகிய ஊரில்தான் 'ஆச்சாரம் கோச்சாரம் போட்டதாம்'. என்ன கொடுமை? 'மேலாடை போட்டதற்காக நங்கையின் கொங்கை இரண்டை அறுத்து கொண்டாட்டம் போட்டனர் மேல் சாதியினர்' இதையெல்லாம் கண்டு கொதித்து போய் இருக்கிறார் ஜீவா.

'தாழ்ந்த குலத்து மாணிக்கத்துடன் தடை கடந்தார். மிடுக்கு நடையுடன் மேல் சாதி தெருவினிலே அழைத்துச் சென்றார்'. நாய் போகும் சாலையிலே, நரிப்போகும் சாலையிலே ஒரு தாழ்ந்த குலத்து மனிதனை அழைத்துச் செல்லலாமா? சனாதனம் சலசலத்தது. ஜீவா குற்றவாளி கூட்டில் நிறுத்தப்பட்டார். ஜீவாவின் சிங்க நாதத்திற்கு முன்னே அந்த சிறுநரி கூட்டம் என்ன செய்யும்? இப்படி சிறு வயதிலேயே தீண்டாமைக்கு எதிராக சங்க நாதம் புரிந்தார் ஜீவா. இதே வைராக்கியத்துடன் வைக்கம் போராட்டத்திலும் தந்தை பெரியாருடன் பங்கேற்றார் ஜீவா.

'சிறை சித்திரவதை ஜீவாவின் லட்சியத்தை சிதைக்க முடியவில்லை சீண்டிதான் விட்டது' ஆம் நாட்டுக்கு உழைப்பது என்று முடிவு எடுத்து விட்ட பின்னர், எந்த கொடுமை அவனை என்ன செய்யும்? அத்தனை கொடுமைகளும் தாங்கி விடுதலைப் பயிர் வளர்த்தான் ஜீவா. இதனால் தான் இவர் தேசத்தின் சொத்து என தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளால் புகழப்பட்டார். அந்த உத்தமரின் வாழ்வை நாம் அறிந்து கொள்ள பெரிதும் உதவும் இந்நூலை அனைவரும் வாங்கி படிக்க வேண்டுகிறோம்.

–சமரன்

| | | |
|---|---|---|
| **நூலாசிரியர்** | : | **த.இந்திரஜித்** |
| **பக்கம்** | : | **150 விலை: 110** |
| **வெளியீடு** | : | **நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50** |



நாகஜோதி
மதுரை புறநகர் மாவட்ட
ஜனசக்தி பொறுப்பாளர்

## மதுரையில்
# ஜனசக்தி விழிப்புணர்வு பிரச்சாரம்




கம்யூனிஸ்டுகள் நேரடியாக செயல்பட முடியாத நிலையில் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் செயல்பட்டனர். கம்யூனிசக் கொள்கைகளை மக்களிடம் பரப்புவதற்காக ஒரு பத்திரிக்கை அவசியமாக இருந்தது. 1936 ல் ஒரு குழு உருவாக்கி அதன் பொதுச் செயலாளராக தோழர் ஜீவா அவர்களையும் கூடுதல் செயலாளராக பி.சீனிவாசராவ் போன்றோர் நியமிக்கப்பட்டனர்.

சென்னை மாகாண சட்டமன்ற தேர்தலும் வந்தது. தேர்தல் பிரச்சாரம் கம்யூனிஸ்டுகளின் கொள்கைகளை மக்களிடையே எடுத்துரைப்பதற்கு நல்ல வாய்ப்பாக அமைந்தது. இதையடுத்து 1937 நவம்பர் 6 அன்று "ஜனசக்தி" பத்திரிக்கை வார இதழாக துவங்கப்பட்டது. இதன் ஆசிரியராக தோழர் ஜீவா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரை நடத்தவும்.
2. பூரண சுதந்திரம் பெறவும்.
3. சோசலிசத்தை உருவாக்கி சமத்துவ சமுதாயம் உருவாக்கவும்.

ஜனசக்தி கடைசி மூச்சு உள்ள வரையில் தயவு தாட்சண்யமின்றி கடும் போர் புரியும் என்று சூளுரைத்தது.

முதல் இதழ் வெளிவந்தது அது அன்றைய ஆட்சியாளர்களின் கண்களை உறித்தியது. அச்சிட்டு தந்த பிரஸ் உரிமையாளர் மிரட்டப்பட்டார். இதனால் ஜனசக்தியை அச்சிட மறுத்து விட்டார். 3 இதழ் வெளியானது , மூன்றாவது இதழில் பாவேந்தர் பாரதிதாசனின் "புதியதோர் உலகம் செய்வோம்" என்ற பாடல் வெளியானது. அந்தப் பாடல் கம்யூனிஸ்டுகளின் கொள்கைகளை மக்களுக்கு மிக எளிமையாகவும் அதே நேரத்தில் வலிமையாகவும் எடுத்துச் செல்ல உதவியது. ஆட்சியின் கெடுபிடியால் ஜனசக்தி நிறுத்தப்பட்டது.

சொந்தமாக அச்சகம் இல்லாமல் பத்திரிக்கை நடத்துவது சிரமம் என்ற நிலை உருவானது: எனவே நிதி வசூலித்து சொந்தமாக அச்சு இயந்திரமும், அச்சு எழுத்துக்களையும் வாங்கி, தோழர் பி.சீனிவாசராவின் நெருங்கிய நண்பரான காங்கிரஸ் ஊழியர் பாலன் என்பவரின் பெயரில் துவங்கப்பட்டது. சேசு அச்சகம் என்ற பெயரில் 1938 ஏப்ரல் 6 அன்று மீண்டும் ஜனசக்தி வெளியானது.

தொடர்ந்து அன்று முதல் இன்று வரை தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர் இயக்கங்கள், ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் மற்றும் உரிமைகளுக்காக துணிச்சலுடன், நேர்மையுடனும் உண்மையை உரக்கச் சொல்லும் இதழாக வெளிவந்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கிய மாபெரும் தலைவர்களில் ஒருவரான தோழர் ஜீவா அவர்கள் இதன் ஆசிரியராக இருப்பது ஜனசக்தியின் கூடுதல் சிறப்பு:

இன்று இந்தியாவில் நடந்துக் கொண்டிருக்கும் பாசிச, மதவாத ஒன்றிய ஆட்சியைப் பற்றியும், அதன் விளைவுகள் பற்றியும் கம்யூனிச தோழர்கள் மட்டுமின்றி அனைத்து மக்களும் அறிந்து கொள்ள வேண்டும். எனவே ஜனசக்தியை விளம்பரப்படுத்தும் நோக்கில் முதல் முயற்சியாக மதுரை புறநகர் மாவட்டத்தில் ஜனசக்தி விளம்பர ஸ்டிக்கர்களை அச்சடித்து ஆட்டோக்களில் ஒட்டி அதன் மூலம் விழிப்புணர்வு பிரச்சாரம் தொடங்கப்பட்டது.

ஒவ்வொரு ஒன்றியத்திலும் குறைந்தது 20 ஆட்டோக்கள் என்ற எண்ணிக்கையில் ஸ்டிக்கர் ஒட்டி தொடங்கப்பட்ட இந்த "ஜனசக்தி விழிப்புணர்வு பிரச்சார இயக்கம்" ஒன்றிய வாரியாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதன் பயனாக மதுரை மாவட்டத்தில் உள்ள 56 ஆட்டோ நிலையங்களிலும் ஜனசக்தி வருட சந்தா பெற முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் கிளை வாரியாக மாலை நேரங்களில் ஜனசக்தி வாசகர் வட்டம் மற்றும் பிரச்சார இயக்கம் நடத்த திட்டமிட்டுள்ளோம். ஆதரவு தாருங்கள் தோழர்களே கம்யூனிசத்தால் மட்டுமே பாசத்தை பாசிசத்தை வீழ்த்த முடியும்.

(இந்த செய்திகளை காட்சியாக ஜனசக்தி தொலைக்காட்சி (Janasakthi Tholaikatchi) முகநூல் பக்கத்தில் பார்க்கலாம்.)

**தொடர்புக்கு: 9952612945**

# அவகாசமின்றி கடன்தாரர்களிடம் பணத்தை வசூலிக்கும் லோக் அதாலத்

**விவசாயிகள் அதிருப்தி**

கள்ளக்குறிச்சி வட்ட சட்டப் பணிகள் குழு மக்கள் நீதிமன்றம் லோக் அதாலத் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் நீதிபதி ராஜலட்சுமி தலைமையில் நடந்தது. கள்ளக்குறிச்சி, சின்னசேலம், அசகளத்தூர் ஆகிய ஊர்களில் செயல்படும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பயிர்க் கடனாக விவசாயிகள் கடன் தொகையினை பெற்று இயற்கை பேரிடர் மற்றும் கொரோனா பெருந்தொற்று பாதிப்பு மற்றும் விவசாயம் நலிந்த காரணத்தினால் கடன் தொகையினை திருப்பி செலுத்த முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் கடன் தொகையினை வசூல் செய்யும் நோக்கத்தில் வங்கியாளர்களின் முடிவின் ஆலோசனைப்படி மக்கள் நீதிமன்றம் வட்டி தள்ளுபடி என்ற பெயரில் நலிந்த பயிர் கடன் தாரர்களுக்கு கால அவகாசம் தராமல் நிதியாண்டின் மார்ச் மாதத்தை கணக்கில் எடுத்துகொண்டு பணத்தை கட்ட சொல்லும் நெருக்கடியால் விவசாயிகள் அதிருப்தியில் கலக்கமடைந்துள்ளனர்.

மேலும் இது போன்ற லோக் அதாலத் மக்கள் நீதிமன்றம் கடன்தாரர்களுக்கு தீர்வு காணும் வகையில் பிரச்சனைகள் இன்றி சமரச உடன்பாட்டினை மன சமாதான படி ஏற்படுத்தும் வகையில் சட்டபூர்வமான அறிவிக்கையில் கூறப்பட்டுள்ள வகையில் சட்ட பணிகள் குழுவில் இடம் பெற்றுள்ள குழுவினரை கொண்டு நடத்தபட வேண்டும்.

அதன் மூலம் நலிந்த விவசாயிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் விதத்தில் அவர்களது குடும்ப சூழ்நிலை, தொழில், உடல் ஆரோக்கிய நிலையை அறிந்து கடன் வட்டித்தொகை தள்ளுபடி செய்வதோடு கடந்தாரர்களின் கருத்துகளை கேட்டு சட்ட பாதுகாப்பு சார்ந்த ஆலோசனைகளை தந்து கால அவகாசம் கொடுத்து கடனை திருப்பி செலுத்துவதற்கு நெருக்கடி கொடுக்காத வகையில் தவணை முறையில் பணம் கட்ட லோக் அதாலத் மக்கள் நீதிமன்றம் செயல்பாடு அமைய வேண்டும்.

அப்போதுதான் பாதிக்கப்பட்ட நலிந்த கடந்தாரர்கள் காப்பாற்றப்படுவார்கள் எனவே நீதியரசர்கள் கவனம் செலுத்தி கடன் சுமையிலிருந்து விவசாயிகளை விடுவிக்க முன் வர வேண்டும் என சமூக ஆர்வலர்களும், பொதுநல வாதிகளும் பாதிக்கப்பட்ட விவசாய கடந்தாரர்களும் எதிர்பார்க்கின்றனர்.

**– கு.கபில்தேவ்**



டி.ராஜா

## அதானி – ஹிண்டன்பர்க் அறிக்கை விவகாரம்:

# நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணை தேவை!

**1958 ஆம் ஆண்டு பிப்ரவரி 18 அன்று, ஒன்றிய அரசாங்கத்தில் நிதியமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த டி. டி. கிருஷ்ணமாச்சாரி, அந்தப் பதவியில் இருந்து ராஜினாமா செய்தார். எல்.ஐ.சி முந்த்ரா ஊழல் விவகாரம் தான் அவர் ராஜினாமா செய்திட காரணமாக இருந்தது.**

கொல்கத்தாவைச் சார்ந்த தொழிலதிபரான ஹரிதாஸ் முந்த்ராவின் நிறுவனங்களில், அப்போது புதிதாகத் தொடங்கப்பட்டு இருந்த எல்.ஐ.சி நிறுவனம் 1.26 கோடி ரூபாயை முதலீடு செய்தது. பிரச்சனையில் சிக்குண்டுக் கிடந்த முந்த்ராவின் நிறுவனங்களைக் காப்பாற்றவே, மிகைமதிப்பு செய்யப்பட்ட விலையில் அந்நிறுவனங்களில் எல்.ஐ.சி முதலீடு செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. அந்தக் குற்றச்சாட்டு நிரூபணமானது.

முறைகேடு செய்த அந்த நிறுவனத்துடன் சலுகை சார்பு (Cronyism) கொண்டிருந்ததாக எல்.ஐ.சி மற்றும் டி.டி.கிருஷ்ணமாச்சாரி மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

அதானி குழுமத்தின் மீது இப்போது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் மற்றும் இப்போதைய அரசாங்கத்துடன் அதானி குழுமம் கொண்டிருக்கும் நெருக்கம் ஆகியவை எல்.ஐ.சி முந்த்ரா ஊழல் விவகாரத்துடன் ஒத்த தன்மை உடையதாகவே இருக்கிறது. கடந்த காலத்தின் முந்த்ரா ஊழலுடன் ஒப்பு நோக்கி, தற்போது என்ன நடைபெறுகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அன்று நாம் பெற்ற படிப்பினைகளை, இன்று நாட்டு மக்கள் நினைவுகூர வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

புலனாய்வு இதழாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பெரோஸ் காந்தி மக்களவையில் 1955 ஆம் ஆண்டில் ஆற்றிய கன்னிப்பேச்சில், தனியார் காப்பீட்டுத் துறையில் நிலவிய முறைகேடுகள் மற்றும் ஊழல்களை அம்பலப்படுத்தினார். டால்மியாஜெயின் குழுமத்தைச் சார்ந்த ராமகிருஷ்ண டால்மியா மீது, அவர் முன்வைத்த குற்றச்சாட்டு நிரூபணமானது. ராமகிருஷ்ண டால்மியாவுக்கு இரண்டு ஆண்டுகால சிறை தண்டனையும் கிடைத்தது.

காப்பீட்டுத் துறையில் பல்கிப் பெருகியிருந்த ஊழல் மற்றும் முறைகேடுகளைக் களைந்திட, ஜவஹர்லால் நேரு அரசாங்கம் சுமார் 250 தனியார் காப்பீட்டு நிறுவனங்களை நாட்டுடைமையாக்கியது. அந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக, நாடாளுமன்றம் நிறைவேற்றிய ஒரு சட்டத்தின் மூலமாக எல்.ஐ.சி நிறுவனம் உருவாக்கப்பட்டது.

எனவே தான், எல்.ஐ.சி நிறுவனத்தை, "நாடாளுமன்றத்தின் குழந்தை" என்று பெரோஸ் காந்தி குறிப்பிட்டார். ஆனால், முந்த்ரா ஊழல் விவகாரத்தை முற்றிலுமாக மறந்துவிட்டு, சலுகை சார்பின் (Cronyism) கருவியாக எல்.ஐ.சி நிறுவனம் மீண்டும் ஒருமுறை பலியிடப்பட்டு இருப்பது வேதனைக்குரியது ஆகும்.

1957 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், ஹரிதாஸ் முந்த்ராவுக்குச் சொந்தமான ஆறு நிறுவனங்களில் எல்.ஐ.சி நிறுவனம் 1 கோடி ரூபாயை முதலீடு செய்தது. முதலீடு செய்யப்பட்ட தொகை இன்றைய மதிப்பின்படி சிறு தொகையாகத் தோன்றலாம். ஆனால், எல்.ஐ.சி நிறுவனம் தொடங்கப்பட்ட காலகட்டத்தில், இது ஒரு மிகப்பெரிய முதலீடு ஆகும்.

முதலீடு தொடர்பான இந்த முடிவை மேற்கொள்வதற்கு முன் எல்.ஐ.சி நிறுவனத்தின் முதலீட்டு குழுவை கலந்தாலோசனை செய்யவில்லை. நிறுவனரீதியான ஊழலுக்கு எதிரான போராளியாகத் திகழ்ந்த பெரோஸ் காந்தி, இந்தப் பிரச்சனையில் காங்கிரஸ் தலைவர்களிடம் முரண்பட்டு நின்றார்; தனது மாமனாரான ஜவஹர்லால் நேரு தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிராக நின்றார்; நாடாளுமன்றத்தில் இந்த ஊழலை அம்பலப்படுத்தினார். இந்த ஊழல் குறித்து விசாரணை மேற்கொள்ள எம்.சி. சக்லா ஆணையத்திற்கு நேரு அரசாங்கம் உத்தரவிட்டது. 24 நாட்கள் கால அவகாசத்தில் ஆணையம் அதன் பணியை நிறைவு செய்தது. ஆணையத்தின் விசாரணை நடவடிக்கைகள் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப் பட்டன. குற்றச்சாட்டுகள் உண்மையென ஆணையமும் உறுதி செய்தது.




நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி ராஜினாமா செய்ய வேண்டியிருந்தது. பிரதமருடனான அவர்தம் நெருக்கம், தீவிர விசாரணை மற்றும் பொறுப்புடைத்தன்மையில் இருந்து அவரைக் காப்பாற்றவில்லை.

1990 களின் தொடக்க காலத்தில், மற்றுமொரு நிதி மோசடி இந்தியப் பொருளாதாரத்தை உலுக்கியெடுத்தது. பங்குச்சந்தை வர்த்தக தரகர் ஹர்ஷத் மேத்தாவுடன் தொடர்புடைய பங்குச்சந்தை முறைகேடுகள் பலவற்றை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் குருதாஸ் தாஸ் குப்தா அம்பலப்படுத்தினார். இந்தியாவின் மிகப்பெரிய நிதி மோசடிகளில் ஒன்றான பங்குச்சந்தை முறைகேடுகளை விசாரிக்க, பி.வி.நரசிம்ம ராவ் அரசாங்கம் நாடாளுமன்ற கூட்டுக் குழுவை அமைத்தது.

இந்த மோசடி தொடர்பாக விசாரணை செய்யப்பட்ட நிறுவனங்கள் ஒன்றில் தனக்குச் சொந்தமாகப் பங்குகள் இருந்த காரணத்தால் வர்த்தகத் துறையின் அப்போதைய இணையமைச்சர் ப.சிதம்பரம் தனது பதவியை ராஜினாமா செய்தார். அரசாங்க அதிகார வட்டத்தில் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்த பல்வேறு நபர்கள் மற்றும் நிறுவனங்கள் நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணைக்கு உள்ளாயினர். அவர்களில் பலர், நிதி மோசடியில் உடந்தையாக இருந்தது கண்டறியப்பட்டது. இந்தியப் பங்குச் சந்தையின் ஒழுங்குமுறைகளை முற்றாக மறுசீரமைப்பதற்கு நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை பாதை வகுத்தது. பொறுப்புடைத்தன்மை முறைமைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

அதானி குழும மர்மங்களில் இருந்து வெளிப்பட்டு இருக்கும் விஷயங்களில் ஒன்று மட்டும் தெளிவாகிறது: வெளிப்படைத்தன்மையும், பொறுப்புடைத்தன்மையும் இல்லை என்பதாகும். ஹிண்டன்பர்க் அறிக்கையின்படி, அதானி குழும நிறுவனங்கள் அனைத்தும் மிகைமதிப்பு செய்யப்பட்டுள்ளவை ஆகும்.

அதானி குழும நிறுவனங்கள் இரண்டில், விலைக்கும், வருவாய்க்கும் இடையிலான மதிப்பு 800 மடங்கு அதிகம் ஆகும். இது போன்ற தரவுகளை ஒன்றிணைத்துப் பார்க்கும் பட்சத்தில், வெளிப்படைத்தன்மையற்ற இந்தக் குழுமம் தீவிர விசாரணைக்கு உரியது என்பது தெளிவாகிறது.

**போர்ப்ஸ் (Forbes) இதழ் அளித்துள்ள தகவல்களின்படி, கவுதம் அதானியின் நிகர சொத்து மதிப்பு 2009 ஆம் ஆண்டு நிலவரப்படி 6.4 பில்லியன் டாலர் ஆகும். 2014 ஆம் ஆண்டில் 7.1 பில்லியன் டாலராகவும், மோடி அரசாங்கம் அதன் முதலாவது பதவிக்காலத்தை நிறைவு செய்யும் போது, அதாவது 2019ல் 15.1 பில்லியன் டாலர் என்ற அளவிற்கு கவுதம் அதானியின் நிகர சொத்து மதிப்பு இருமடங்காக உயர்ந்தது.**

அதற்குப் பிறகு, 2022 ஆம் ஆண்டில் அவரது நிகர சொத்து மதிப்பு 124 பில்லியன் டாலர் என்ற அளவிற்கு உயர்ந்தது. உலகின் இரண்டாவது பணக்காரர் என்று கவுதம் அதானி அறியப்பட்டார்.

எவ்வித அனுபவமும் இல்லையென்றாலும் விமான நிலையங்களை இயக்குவது, ஆஸ்திரேலியாவில் சுரங்கங்களைப் பெறுவது, வங்கதேசத்தில் மின்சார ஒப்பந்தங்களைச் செய்வது... என்று எங்கும் எதிலும் அதானியின் பெயர் தான் இடம்பெற்றுள்ளது.

தனிநபர் ஒருவரிடம் வரலாறு காணாத அளவிற்கு செல்வம் குவிந்து வருவது மிகவும் கவலைக்குரியதாகும். இராணுவம் உள்ளிட்ட மிக முக்கியமான துறைகள் பலவற்றில் இருந்து அதானி குழுமம் கொள்ளை இலாபம் ஈட்டி வருவதால் அவரின் மிகைமதிப்பு செய்யப்பட்ட நிறுவனங்கள் சிறு மற்றும் நிறுவனரீதியிலான முதலீட்டாளர்களுக்கு மட்டுமின்றி ஒட்டுமொத்த தேசத்தின் நலனுக்கும் எதிரானதாகும்.

**எல்.ஐ.சி மற்றும் எஸ்.பி.ஐ போன்ற முன்னணி நிதி நிறுவனங்களும் அதானி குழுமத்தின் மோசடிக்குள் சிக்கியிருப்பதால், தேசத்தின் நிதித்துறை நேர்மை மற்றும் நாணயம் பேரபாயத்திற்கு உள்ளாகக் கூடும்.**

அதானி குழுமத்திற்கு வழங்கப்பட்டுள்ள கடன் மற்றும் அதன் நிறுவனங்களில் செய்யப்பட்டுள்ள முதலீடுகள் ஒன்றும் பெரிய விஷயம் இல்லை என்பது போல் எஸ்.பி.ஐ மற்றும் எல்.ஐ.சி நிறுவனங்கள் இந்த விஷயத்தைப் புறந்தள்ள முயன்றன.

இந்த மோசடி குறித்து நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணை கோருவது முற்றிலும் நியாயமானது ஆகும். உண்மை வெளிவர வேண்டும்! இது குறித்து யாரும் அச்சப்பட வேண்டியதில்லை!

முந்த்ரா விவகாரம் தொடர்பாக நாடாளுமன்ற மக்களவையில் விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், பெரோஸ் காந்தி கூறியதாவது: "நான் விவரித்துள்ளபடி, இது போன்ற மிகப்பெரிய மோசடிகள் நிகழும் போது, மவுனமாக இருப்பதும் ஒரு குற்றம் ஆகும்."

என்ன நடந்தது? எவ்வாறு நடந்தது? என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால்..., பொறுப்புடைத்தன்மையை நிறுவிட வேண்டுமென்றால்..., நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணை அவசியம் ஆகும்.

**நன்றி: தி இந்தியன் எக்ஸ்பிரஸ்**
**தமிழில்: அருண் அசோகன்**

## திருமண விழாவில் ரூ.5000 ஜனசக்தி வளர்ச்சி நிதி



மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஒன்றியக் குழு உறுப்பினர் இராஜேந்திரன் – பொம்மியம்மாள் தம்பதியினரின் மகன் கார்த்திகேயன் தஞ்சாவூர் செந்தில் – விஜயா தம்பதியினரின் மகள் சுஜாதா ஆகியோரது திருமணம் நிகழ்ச்சி பிப்.12 அன்று தேங்காய் பழவியாபாரிகள் சங்கம் திருமண மஹாலில் நடைபெற்றது. மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் காளிதாஸ், புறநகர் மாவட்டச் செயலாளர் முத்துவேல், மாவட்ட குழு உறுப்பினர்கள், நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.5,000 வழங்கப்பட்டது. வாழ்க மணமக்கள்!

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 18.02.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# வாழ்வுரிமை பறிக்கும் மோடி அரசின் வஞ்சக செயலை கண்டித்து
# மார்ச் 7ல் ஆர்ப்பாட்டம்!



## தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்க மாநிலக்குழு தீர்மானம்

**தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம் 08.02. 2023 மற்றும் 09.02.2023 ஆகிய தேதிகளில், கள்ளக்குறிச்சி நகரில் சங்கத் துணைத் தலைவர் வி.பி.பழனிசாமி தலைமையில் நடைபெற்றது.**




சங்கத்தின் மூத்த தலைவர்கள் இரா முத்தரசன், (மாநிலச் செயலாளர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி) அ.இராமமூர்த்தி (புதுச்சேரி) ஆகியோர் அரசியல் நிகழ்ச்சிப் போக்குகளையும், சங்கத்தின் முடிவுகளையும் விளக்கி சிறப்புரையாற்றினர்.

சங்கத்தின் பொதுச் செயலாளர் நா.பெரியசாமி, மாநிலச் செயலாளர்கள் அ. பாஸ்கர், நா.சாத்தைய்யா, மாநில துணைத் தலைவர் ஏ.எல்.ராசு உள்பட மாநிலக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

விவசாயத் தொழிலாளர் வாழ்க்கை நிலை, ஊரகப்பகுதி மக்கள் பிரச்சினைகள் குறித்து விவாதித்து, கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### பட்டியல் சாதியினர், பழங்குடியினர் வளர்ச்சி - தொழில் முதலீட்டு உதவித் திட்டம் நிறைவேற்றுக!

தெலுங்கான மாநிலத்தில் தலித் பந்து திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பட்டியலின சாதியினர் குடும்பங்களில் படித்த இளைஞர்கள் சுயதொழில் அல்லது வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் குடும்பத்திற்கு தலா ரூ.10 லட்சம் நிதி முழு மானியமாக வழங்கி வருகிறது. இத்திட்டத்தை முன் மாதிரியாகக் கொண்டு தமிழ்நாட்டில் பட்டியலின சாதியினர், பழங்குடியின மக்கள் குடும்பங்கள் தொழில் மற்றும் வணிகத் துறையில் ஈடுபட, பட்டியலின, பழங்குடியின மக்களுக்கான சிறப்பு உட்கூறு நிதியை அடிப்படையாக் கொண்டு ரூ 10 லட்சம் முழு மானியம் வழங்கும் முதலீட்டு உதவித் திட்டம் ஒன்றை உருவாக்கி செயல்படுத்த வேண்டும் என தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம், தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறது

### வாழ்வுரிமை பறிக்கும் மோடி அரசின் வஞ்சக செயலை கண்டித்து மார்ச் 7ல் ஆர்ப்பாட்டம்!

நாடு முழுவதும் உள்ள 25 கோடி விவசாயத் தொழிலாளர்கள், கிராமப்புறத் தொழிலாளர்களின் வாழ்வுரிமை மீது மோடியின் ஒன்றிய அரசு கொடுந் தாக்குதல் நடத்தியுள்ளது. விவசாயத் தொழிலாளர் உள்ளிட்ட ஊரகப் பகுதி உடல் உழைப்புத் தொழிலாளர் குடும்பங்கள் ஆண்டுக்கு நூறுநாள் வேலை பெறும் உரிமை சட்டபூர்வமாக ஏற்கப்பட்டு, 2005 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது இந்தச் சட்டத்தின் கீழ் திட்டப் பணிகள் உருவாக்கப்பட்டு, வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. நாடு முழுவதும் 15 கோடி குடும்பங்கள் வேலை பெறும் உரிமை அட்டை பெற்றுள்ளன. இவர்களுக்கு நூறு நாள் வேலை வழங்க ஆண்டுக்கு ரூ 2. 74 லட்சம் கோடி நிதியொதுக்கம் செய்ய வேண்டும் என பொருளாதார அறிஞர்கள் கூறுகிறார்கள். கொரோனா நோய்த் தொற்று காலத்தில் (2020–21) இத்திட்டத்திற்கு ஒரு லட்சத்து 11 ஆயிரம் கோடி ரூபாய் ஒன்றிய அரசு செலவிட்டுள்ள நிலையில், ஆண்டுக்கு ஆண்டு நிதி ஒடுக்கீட்டை குறைத்து வந்த ஒன்றிய அரசு வரும் 2023 –24 ஆம் ஆண்டிற்கு 60 ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ளது. 17 ஆயிரம் கோடி ரூபாய் இத்திட்டத்தில் வேலை செய்த தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய ஊதியப் பாக்கி இருக்கும் நிலையில், நடைமுறையில் ரூ 43 ஆயிரம் கோடி மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் வேலை அட்டை குடும்பங்களுக்கு தலா 15 நாட்கள் கூட வேலை வழங்க இயலாது என்பதை சுட்டிக் காட்டி. விவசாயத் தொழிலாளர்கள் போராடி பெற்ற, வேலை பெறும் சட்டபூர்வ உரிமையை மறுத்து, வாழ்வுரிமையை பறிக்கும் வஞ்சக செயலில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் ஒன்றிய அரசின் விவசாயத் தொழிலாளர் விரோதச் செயலை ஊரகப் பகுதி உடல் உழைப்புத் தொழிலாளர்களிடம் விளக்கி, பிப்ரவரி 18, 19, 20 தேதிகளில் விழிப்புணர்வு பரப்புரை இயக்கம் நடத்துவது என்றும், வரும் 07.03.2023 ஆம் தேதி மாவட்ட வட்ட, வட்டார அளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம் முடிவு செய்கிறது.

### வீடில்லாதோர் வீடு கட்ட குடும்பத்துக்கு தலா ரூ.6 லட்சம் மானிய நிதி வழங்குக!

ஒன்றிய அரசும், மாநில அரசும் ஒருங்கிணைந்து வீடு கட்டும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கு தற்போது வழங்கப்படும் நிதிப் பற்றாக்குறையால் பல நெருக்கடிகள் ஏற்படுகின்றன. வீடு கட்டும் பணி பாதியில் நின்றுவிடுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு வறுமை நிலையில் வாழும் குடும்பங்கள் அனைத்தும் குறைந்தபட்ச அடிப்படை வசதிகள் கொண்ட வீடு கட்டி வாழ தலா ரூ 6 லட்சம் முழு மானியம் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம் தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### அனைவரும் ஆதரவு தர இரா.முத்தரசன் வேண்டுகோள்

கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுக்குழு கூட்டத்தில் சிறப்புரையாற்றிய பின்பு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

ஈரோடு கிழக்கு தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெற இருக்கிறது. முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் கூட்டணி கட்சியினரை ஒன்றிணைத்து, கருத்துக்களை கேட்டறிந்து ஈரோடு கிழக்கு தொகுதி காங்கிரஸ் வெற்றி பெற்ற தொகுதி என்பதால், கூட்டணி தர்மம் காக்க மீண்டும் காங்கிரஸ் கட்சிக்கு வழங்கினார். காங்கிரஸ் சார்பில் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார். மேலும் மக்கள் நீதி மய்யம் கட்சி கமலஹாசன் போன்றோர் ஆதரவு அளித்துள்ளனர். எதிரணியில் நிற்பவர் தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளர் என அண்ணாமலை சொல்கிறார். அண்ணா திமுகவின் வேட்பாளர் என எடப்பாடி பழனிச்சாமி சொல்கிறார். கூட்டணி தர்மம் காக்கப்படவில்லை. என்ன காரணம்? ஏற்கனவே இந்த தொகுதியில் போட்டியிட்டது தமிழ் மாநில காங்கிரஸ். அதிமுக பெரிய கட்சி என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை. எம்ஜிஆரால் தொடங்கப்பட்ட கட்சி எம்ஜிஆர் முதலமைச்சராக இருந்து ஜெயலலிதா, ஓபிஎஸ், இபிஎஸ் முதலமைச்சராக இருந்துள்ளனர்.

எம்ஜிஆர் எந்த நோக்கத்திற்காக கட்சி தொடங்கினாரோ அந்த நோக்கம் சிதைந்துள்ளது. சுதந்திரமாக, சுயமாக முடிவெடுக்க முடியாமல் பாஜக உத்தரவுக்கு அடிபணிந்து இருக்கிறார்கள். கிராமப்புற தொழிலாளர்களின் வறுமை நிலையை போக்க வெகுஜன மக்கள் போராடி பெற்ற மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டம் சட்டமாக்கப்பட்டு மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது இந்த பணியை மேற்கொள்ள நிதி ஒரு பொருட்டல்ல எவ்வளவு நிதி ஆனாலும் ஒதுக்கலாம் என கம்பீரமாக சொன்னார்.

தற்போது மோடி அரசு ஆண்டுதோறும் நிதியை படிப்படியாக குறைத்து திட்டத்தை சீரழித்து முடக்க பார்க்கிறார். நிதியை குறைத்தால் கூட பரவாயில்லை தமிழகம் போன்ற வளர்ச்சி பெற்ற மாநிலங்களுக்கு இந்த பணி தேவையில்லை. இதற்கான நிதியை வேறு மாநிலங்களுக்கு செலவிடலாம் என்று பிரதமரே சொல்கிறார். சென்ற நிதியாண்டில் ரூ.89 ஆயிரம் கோடி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது.

இந்த ஆண்டு பட்ஜெட்டில் வெறும் ரூ.60 ஆயிரம் கோடி தான் ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ. 29 ஆயிரம் கோடி குறைக்கப்பட்டுள்ளது அதாவது 33 சதவீதம் நிதி குறைத்துள்ளார்.

இது எப்படி ஏழைகள் அரசு என்று சொல்ல முடியும்? வேலை செய்த தொழிலாளர்களுக்கு நாடு முழுவதும் ரூ.17 ஆயிரம் கோடி ஊதிய பாக்கி வைத்துள்ளனர். தமிழகத்தில் பல மாவட்டத்தில் ஊதியமே போடவில்லை. இதற்காக பல மாவட்டங்களில் போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. துணை ஜனாதிபதி அரசியலமைப்புச் சட்டம் நாடாளுமன்றத்தை கட்டுப்படுத்தாது என சொல்கிறார். அதே மாதிரி சிறுபான்மை மாணவர்கள் படிப்பதற்கு கல்வி உதவி தொகை ரூ.2,515 கோடி ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு ரூ.1689 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 38% நிதி குறைக்கப்பட்டுள்ளது.

பாஜகவின் அராஜக ஆட்சியை சிறுபான்மை மக்கள் அச்சத்தோடு பார்க்கிறார்கள். இந்த ஆட்சி யாருடைய நலனை பாதுகாக்கிறது என்றால் அதானி, அம்பானி ஆகியோரை பாதுகாக்கும் அரசாக உள்ளது.

மோடி அரசு ஒரு பொதுத்துறை நிறுவனத்தைக் கூட உருவாக்கவில்லை. மாறாக 13 பொதுத்துறை நிறுவனங்களை அடிமாட்டு விலைக்கு கார்பரேட்டுகளுக்கு விற்றுள்ளார்.

ஆகவே சாதாரண ஏழை, எளிய கூலித் தொழிலாளர்கள், விவசாயிகளை பாதுகாக்கும் அரசாக இல்லை என்பது தான் இப்போதைய நிலை. ஆகவே இந்த ஆட்சியை தூக்கி எறிய வேண்டும். இது நீடித்தால் பேராபத்தினை சந்திக்க நேரும்.

தெலுங்கானா மாநிலத்தில் ஒரு தொகுதிக்கு பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த 100 பேரை தேர்வு செய்து, ஒரு குடும்பத்திற்கு தொழில் மேம்பாடு அடைய ரூ.10 லட்சம் இலவசமாக தரும் திட்டம் செயல்பாட்டில் இருக்கிறது. இத்திட்டத்தை தமிழ்நாட்டிலும் அமல்படுத்த மாநில அரசு முன்வர வேண்டும்.

இதே போல கேரள மாநிலத்தில் அரசு பணியில் உள்ள பெண்களுக்கு மாதவிடாய் காலங்கள், கர்ப்ப காலகங்களில் விடுப்பு அதிக நாள் வழங்கிட முடிவு செய்துள்ளதை வரவேற்கின்றோம். டெல்டா மாவட்டங்களில் பெய்த மழையில் நெற்பயிர்கள் சேதம் அடைந்து விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனை அறிந்த முதலமைச்சர், அமைச்சர்களை அனுப்பி பார்வையிட்டு ஹெக்டேருக்கு இழப்பீட்டு நிவாரணம் ரூ.20 ஆயிரம் தருவதற்கு உத்தரவிட்டுள்ளார். இருப்பினும் இது போதாது. ஏக்கருக்கு ரூ.30 ஆயிரத்திலிருந்து ரூ.35 ஆயிரம் வரை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். அதற்கு ஒன்றிய அரசும் நிவாரணமாக நிதி வழங்கிட வேண்டும்.

மேலும் 20% ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும். நிறம் மாறிய நெல்லையும் எடுத்துக் கொள்ள வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதியை ஒன்றிய அரசு குறைத்ததை கண்டித்து வருகிற மார்ச் மாதம் 7 ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் மாவட்ட, கோட்ட, வட்ட, ஒன்றிய தலைநகரங்களில் தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது என மாநில பொதுக் குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, அனைத்து அரசியல் கட்சிகள், ஜனநாயக சக்திகள், பொதுமக்கள் ஆதரவு தர வேண்டும். இவ்வாறு இரா.முத்தரசன் பேட்டியில் குறிப்பிட்டார்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.